Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම KANNOTTAM

வெளியீடு-33 | 10 செப்டம்பர் 2006 | விலை:- 07.00

"நாம் வாழ்க்கையைக் நேசிப் போம் மரணத்தை அல்ல. ஆனால் எமது தார்மீக உணர்வுகளுக்கு மரண அச்சுறுத்தல் தடைபோட முடியாது"

தோழர் கேதீஸ்

# தோழர் கேதீஸ் சில நினைவுகள்

## எம் மாபெரும் சிந்தனையாளனின் மறைவு



1980 களின் முற்பகுதியில் யாழ்ப்பாணம் ஆடியபாதம் வீதியில் யாழ் பல்கலைகழக ஆசிரியர்களுக்கான விடுதியொன்றில் ஒரு இரவுப் பொழுதில் அவரை முதன் முதலில் நான் சந்தித்தேன். அப்போது அவர் எதிர்காலத்தில் எங்களுடன் இணைந்து செயற்பட போகிறார், முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுப் பாத்திரமொன்றை ஆற்றப் போகிறார் என்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

யாழ் குடாநாட்டு கிராமப் புறங்களில் வர்க்க ரீதியாகவும், சாதி ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக பொருளாதார மேம்பாடு தொடர்பாக அவருடன் பேசச் சென்ற கிராமிய உழைப்பாளர் சங்கம், ஈழ மாணவர் பொது மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவிலேயே நானும சென்றிருந்தேன். தோழர் கேதீஸ் காலஞ்சென்ற இடதுசாரி புத்திஜீவி நியூட்டன் குணசிங்க இன்னுமொருவர் அவரை சரியாக ஞாபகமில்லை.

யாழ்குடாநாட்டு செம்மண் பிரதேச வறிய கூலி விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்துவது எவ்வாறு என்பதே எமது கலந்துரையாடலில் கருப்பொருளாக இருந்தது. அவர்கள் நிலங்களுடன் கட்டப்பட்டிருப்பதில் இருந்தும், சமூக அடிமைத்தனத்தில் இருந்தும் விடுபடுவதற்கான மார்க்கம் பற்றி விவாதித்தோம். தோழர் கேதீஸ் சில மாற்று ஏற்பாடுகள் தொடர்பான முன்மொழிவுகளை முன்வைத்தார்.

உள்ளூர் வளங்களை கொண்டு இயக்கக் கூடிய சிறு தொழிலகங்களை நிறுவுவது பற்றி நாம் அவருடன் பேசினோம். ஒடுக்கப்பட்ட மக்கள் சுயமரியாதை கௌரவத்துடன் வாழ்வதற்கான வழிவகைகள் பற்றிய பேச்சு முதன்மை பெற்றிருந்தது. அப்போது அவர் இலங்கை சமூக விஞ்ஞானிகள் மன்றத்தின் அங்கத்தவராக இருந்தார்.

எங்களது பேச்சு சமூக பொருளாதார விடுதலையுடன் தேசிய விடுதலை பற்றிய எல்லைகளுக்கும் சென்றது. நியூட்டன் குணசிங்கா இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றி தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த ஒரு இடதுசாரிக் கல்விமான். எங்களது பேச்சு சர்வதேச விவகாரங்களுக்கும் விரிந்தது. கெடுபிடி யுத்தக்காலம் சோவியத் சார்பு அணி, அமெரிக்க சார்பு அணி என உலகம் இரண்டு முகாமாக இருந்த காலம் தொழிலாளர் வர்க்கத்தின் தாயகம் சோவியத் யூனியன் என்றிருந்த காலம்.

நியூட்டன் குணசிங்க அவர்கள் அவ்விடத்தில் நகைச்சுவையான கதையொன்றை கூறினார். பிரித்தானிய வெளிவிவகார அமைச்சராக இருந்த டக்ளஸ் கியூமும், சோவியத் யூனியனின் வெளிவிவகார அமைச்சராக இருந்த அன்ரி குரோமிக்கோவும் சந்தித்துக்கொண்ட போது டக்ளஸ் கியூம் கூறினாராம் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றி பேசுவதற்கு எனக்குத்தான் தகுதி உண்டு நான் தொழிலாளி வர்க்கத்தில் இருந்து வந்தவன், நீர் முதலாளி வர்க்க பின்புலத்தை கொண்டவர் என்று குரோமிக்கோவை பார்த்து பேசினாராம் அதற்கு குரோமிக்கோ அமைதியாக ஆம் நாங்கள் இருவருமே பிறந்த வர்க்கங்களுக்கு துரோகம் செய்து விட்டோம் என்று. இந்த நகைச்சுவை பலருக்கும் தெரிந்த பிரபலமான ஒன்றுதான் ஆனால் நான் அப்போதுதான் அதை கேள்விப்பட்டேன்.

தோழர் கேதீஸ் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றி சில கருத்துக்களைத் தெரிவித்தார். 1980 வேலை நிறுத்தில் வீதிக்கு விரட்டப்பட்ட தொழிலாளர்கள் பற்றியும் பேசினோம். தேசிய விடுதலையுடன் சகலவிதமான சமூக அடக்குமுறைகளுக்குமெதிரான போராட்டம் என்ற எமது கருத்தில் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். நிரஞ்சனா என்ற புனை பெயரில் கேரள நாவலாசிரியராக இருக்க வேண்டும் எனக்கருதுகிறேன்.

04ம் பக்கத் தொடர்ச்சி

# மனிதாபிமான நெருக்கடியும் அதிகாரப்பகிர்வும்

அகதிகளாகும் மக்களின் தொகை பெருகிக்கொண்டிருக்கிறது. ஐ.நா சபையின் நிவாரண அமைப்புக்களின் புள்ளி விபரங்கள் இடம் பெயர்ந்தவர்களின் தொகை இரண்டு லட்சத்து இருபதினாயிரத்தையும் தாண்டிவிட்டதாக தெரிவிக்கின்றன. தமிழகத்திற்கு சென்றடைந்தவர்கள கடந்த ஜனவரியில் இருந்து இதுவரை 12,000 ஐயும் தாண்டிவிட்டது.

இது இன்றைய நாள்வரை உள்ள விபரம். நாளும் பொழுதும் அகதிகளாகும் மக்களின் தொகை அதிகரித்துச் செல்கிறது. குறிப்பாக திருமலையில் இருந்து பெருந்தொகையான மக்கள் இந்தியாவிற்கு புலம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். மன்னாரிலும், பேசாலை, வங்காலை உள்ளிட்ட கிராமங்களில் இருந்து பெருவாரியாக மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். நிலைமை இவ்வாறே போனால் இன்னும் சில நாட்களில் அகதிகளாகும் மக்களின் தொகை 3 லட்சத்தையும் தாண்டிவிடலாம்.

கடந்த கால் நூற்றாண்டுகளில் இடையறாது அகதிகளாக மக்களை உருவாக்கும் பிரதேசங்களாகவே வடக்கு கிழக்கு காணப்படுகிறது. தற்போது இனரீதியான பதற்ற நிலைமையொன்றும் அதிகரித்துச் செல்கிறது. புலிகளும் தென்னிலங்கையில் உள்ள தீவிரவாத சக்திகளும் அதற்கு தொடர்ச்சியாக எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கின்றன. அபிவிருத்திப் பணிகள் மாத்திரமல்ல அன்றாட நடவடிக்கைகளும் வடக்கு கிழக்கில் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

கடந்த கால் நூற்றாண்டுகளில், வடக்கு கிழக்கின் வாழ்வு இவ்வாறுதான் பெரும்பாலான காலங்களில் அமைந்திருக்கிறது. 1981ம் ஆண்டு குடிசன கணக்கெடுப்பின்படி வடக்கு கிழக்கில் 25 லட்சம் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். தற்போதைய நிலவரங்களின்படி 14 லட்சத்துக்கு உட்பட்ட தமிழர்களே வாழ்கிறார்கள். ஐரோப்பாவிற்கும் வட அமெரிக்காவிற்கும் 7 லட்சம் வரையிலான தமிழர்கள் கடந்த 20 ஆண்டுகளில் புலம் பெயர்ந்து சென்றிருக்கிறார்கள். கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் 2 லட்சம் வரையிலான தமிழர்கள் இடம் பெயர்ந்து வாழ்கிறார்கள். இந்தியாவில் சுமார் ஒன்றரை லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். 60,000 பேர்வரை இந்த 20 வருட யுத்தத்தில் உயிரிழந்திருப்பதாக கூறப்படுகிறது. இயற்கையாக ஏற்படும் அதிகரிப்பையும் சேர்த்துக் கொண்டால்கூட 15 லட்சத்துக்கும் 16 லட்சத்துக்கும் இடையிலான தமிழர்களே வாழ்கிறார்கள்.

கிழக்கில் தமிழர்களின் தொகை கணிசமான அளவு அருகிவிட்டது. முஸ்லீம் மக்களின் சனத்தொகை வீதாசாரத்[illegible] யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு, வவுனியா உட்பட ஏனைய வடக்கு கிழக்குப் பகுதிகளில இருந்தும் ஒரு லடசம் வரையிலான முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். தவிர கிழக்கில் முஸ்லீம்களின் கலாச்சார நகரமாக கருதப் படக்கூடிய மூதூரில் இருந்தும் சில நாட்களுக்குள்ளேயே புலிகளின் உள்நோக்கம் கொண்ட செயற்பாடுகளினால் 40,000 வரையிலான முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக கிண்ணியா, தோப்பூர் பகுதிகளில் இருந்தும் மன்னார், வவுனியா போன்ற பகுதிகளில் திரும்பவும் குடியேறிய முஸ்லீம்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இதுவொரு மிக மோசமான சமூக அவலமாகும். கடந்த இரண்டு தசாப்தங்களில் மக்கள் இருப்பதும் ஓடுவதும் உயிரிழப்பு, சொத்தழிவுகளை சந்திப்பதிலும் ஒரு வழமைபோலாகிவிட்டது.

இப்போதுள்ள சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு வடக்கு கிழக்கில் அரசியல் ரீதியாக எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியாது. உதாரணமாக கிழக்கில் சகல சமூகங்களும் சமனான வீதாசாரத்தில் இருக்கின்றனர். எனவே வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதது. கடந்த கால் நூற்றாண்டுகளாக ஒரு தொடர் நிகழ்ச்சியாக இருக்கும் யுத்தமும் வன்முறையும் இனங்களின் வீதாசாரத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. பாரம்பரியமான திட்டமிட்ட குடியேற்றங்கள் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இவையும் சமூக பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

தெற்கில் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனபடியால் திட்டமிட்ட குடியேற்றம் பற்றிய கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதது என்ற வாதம் பொருத்தமற்றது. 1977 இற்கு முன்னர் தமிழர்கள் இலங்கையில் பரவலாக வாழ்ந்திருக்கிறார்கள். 1977, 80, 83 வன்முறைகளில் துரத்தப்பட்ட தமிழர்கள் மீண்டும் தாங்கள் இருந்த இடங்களில் குடியேற்றப்பட வில்லை என்பதும் உண்மையாகும்.

இதேவேளை மலையகத்தில் இருந்து வெவ்வேறு காலகட்ட இன வன்முறையின் போது துரத்தப்பட்ட தமிழர்கள் வன்னியில் இரண்டு தசாப்தங்கள் ஊடாக தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளனர்.

திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு அப்பால் வடக்கு கிழக்கில் வாழ்ந்த சிங்களவர்களும் இடம்பெயர்ந்து சென்ற நிகழ்வுகளும் இங்கு கருத்துக்கு எடுக்கப்பட வேண்டும்.

தவிர உயிரழிவு, தமிழர்களுக்கென்று மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. யுத்தத்தில் ஈடுபடுததப்படும் படையினர் கணிசமான அளவில தெற்கின் ஏழை சிங்கள விவசாயக

தொடர்ச்சி 02ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## அனுராவுக்குத்தேவை நாவடக்கம் நிதானம் இங்கிதம்

அமைச்சர் அனுராவின் பாராளுமன்றத்தில் இந்தியத்தூதுவர் தொடர்பாக முன்வைத்த கருத்துக்கள் பொருத்தமற்றவையும் நாகரிகம், பண்பாட்டிற்கு முரணானவை. என்பதை சொல்லித்தான் ஆகவேண்டும். இலங்கையில் அவ்வப்போது இத்தகைய விசமக்கருத்துக்கள் செயற்பாடுகள் எமது இருநாடுகளுக்கிடையிலுமான உறவில் கீறல்களை அவ்வப்போது ஏற்படுத்தியுள்ளன.

இலங்கைத் தமிழர்களையும், மலையகத் தமிழர்களையும் அவ்வப்போது கள்ளத்தோணிகள் என்பதும் ஆக்கிரமிப்பாளர்கள் என்பதும் பௌத்த சிங்கள தீவிரவாத சக்திகளிடம் மாத்திரமல்ல படித்த நாகரிகமான அரசியல்வாதிகள் என்று சொல்லப்படுபவர்களிடமும் அவ்வப்போது காணப்பட்டது.

இந்த விரோத நிலைப்பாடுகளில் இந்திய விரோதக் கருத்துக்களும் அவ்வப்போது விரவிக் காணப்பட்டன. பிரேமதாசவும் பிரபாகரனும் அண்ணன் தம்பி உறவு கொண்டாடி இந்திய அமைதிகாப்பு படையை வெளியேறக் கோரியதை நாமறிவோம். இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானபோது அதற்கெதிராக தெற்கில் விரும்பத்தகாத கூச்சல்கள் எழுந்ததும் வரலாறு. பிழையான அரசியல் வியாக்கியானங்கள் பொறுப்பற்ற கதைகள் விபரீதங்களுக்கே வழிவகுக்கும். இந்த நாட்டின் சுபிட்சம் மக்களின் சுதந்திரமான ஐக்கியம் அதனூடான தேச நிர்மாணம் என்பதே இன்றைக்குத் தேவை. அதற்கு இந்தியாவின் அனுபவங்கள் எங்களுக்குத் தேவை.

அதிகாரப்பகிர்வு சமூக பொருளாதார நிர்மாணம் வரலாற்று சமூக பண்பாட்டு வேர்களைப் பாதுகாப்பதற்கு இது மிக மிக அவசியம் முட்டாள்தனமான, சோக்கு போ்வழிகளான அரசியல்வாதிகள் சிலசந்தா்ப்பங்களில், ஒருசில நிமிடங்களில் இவற்றைச் சீருலைத்து விடுகிறார்கள் இந்தியத் தூதுவரை அவருடைய அலுவலைப் பார்த்து விட்டு இருக்கும் படியும் எமது நாட்டு உள் விவகாரங்களில் தலையிடாதிருக்கும் படியும் அனுரா தரங்கெட்ட வார்த்தையலங்காரப்பந்தலுடன் திருவாய் மலா்ந்திருந்தார்.

அனுராவின் வார்த்தைப் பிரயோகங்கள் தொடர்பில் இந்தியா கருத்துத் தெரிவிக்கையில் இந்தியாவிற்கு இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் நோக்கம் எதுவும் கிடையாது, இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபமா ராவ் அவர்கள் ஒரு மூத்த ராஜதந்திரி அனுபவம் வாய்ந்தவர் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான உறவு தனித்துவமானதும் பிரத்தியேகமானதுமாகும். வரலாற்று வழிப்பட்டது மாத்திரமல்ல புவியியல் ரீதியில் இருநாடுகளின் அமைவிடம், பாதுகாப்பு போன்ற விடயங்களில் இந்தியாவும் இலங்கையும் பிரத்தியேகமாகவும், தனித்துவமாகவும் இணைந்து செயற்பட வேண்டியது அடிப்படையானதாகும். எனவே பொறுப்பற்றபேச்சு தவிர்க்கப்படுவதும் நாவடக்கமும் இங்கிதமும் தேவை. கபினட் அந்தஸ்திலுள்ள அமைச்சருக்கு இது மிக மிக அவசியம்.

## மனிதாபிமான நெருக்கடியும்..............

01ம் பக்கத் தொடர்ச்சி

குடும்பங்களைச் சேர்நதவர்கள். முஸ்லீம்கள் இவ்வின முரண்பாட்டுச் சிக்கலில் கணிசமான அளவில் உயிரிழந்திருக்கிறார்கள்.

இந்த சமூக சிதைவு மாற்றங்கள் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றை காண்பதற்கான முனனெடுப்புக்கள் இதயபூர்வமாக நிகழ்த்தபபடாததன் விளைவேயாகும். இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கையில் எண்ணிக்கையில் சிறுபான்மையின மக்களின் தேசிய இனங்கள், இனக்குழுக்களின் உரிமைகளை மறுதலிக்கும் போக்கு அதிகரித்து வந்ததன் விளைவு இலங்கை ஒரு தேசமாக பரிணமிப்பதில் பாரிய சிக்கல்களை உருவாக்கியது.

மிகவும் படித்த சிங்கள தலைவர்கள்கூட பெரும்பான்மை இன பெருமிதவாத உணர்வுகளுக்கு அடிபணிந்து வநதனர். இலங்கையின் தேசிய அரசியல் என்பது மதத்திலிருந்து சுதந்திரமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அது மதத்தையும் இனத்தையும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான கோஷங்களாக முன்னிறுத்தி வந்ததன் விளைவு இந்நாடு மிகப் பாரதூரமான இன ரீதியான மோதல்களை நோக்கி செல்வதற்கும் நீடித்த வன்முறை சுதந்திரத்துக்குப் பின்னான பின் அரை காலப்பகுதியில் தோன்றுவதற்கும் வழிவகுத்தது. சமூக அபிவிருத்திப் பாதையில் எங்கோ சென்றிருக்க வேண்டிய இந்த நாடு இன்று உயிரழிவும் அகதி வாழ்வும் பொருளாதார பினதங்கலும் என்ற நிலைக்கு சென்றுள்ளது. இதற்கு இனப்பிரச்சினையை பூதாகரமாக உருவாக வழிவகுத்தது ஒரு மிக முக்கியமான காரணியாகும்.

இலங்கையின் பாரம்பரியமான இடதுசாரி கட்சிகள் இனப்பிரச்சினை தொடர்பில் எப்போதும் தீர்க்கதரிசனமான நிலைப்பாட்டை கொண்டிருந்தன.

1940 களின் முற்பகுதியில் சுயநிர்ணய உரிமையையும் 1950களின் நடுப்பகுதியில் சமஷ்டி முறையையும் இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி வந்திருக்கிறது. 1950 களின் நடுப்பகுதியிலேயே இலங்கை சமசமாஜ கட்சியும் சமஷ்டி முறையை தெளிவாக முனவைத்தது. இந்த இரண்டு இடதுசாரி கட்சிகளும் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கையின் தமிழ், முஸ்லீம், மலையக மக்கள் தொடர்பில் சமூக சாதகமான கருத்துக்களையும் செயற்பாடுகளையும் முனவைத்து வந்திருக்கின்றன.

1980 களின நடுப்பகுதியில் இந்திய-இலங்கை ஒப்பந்தததின் ஊடாக அதிகாரப் பகிர்வு நடைமுறையொன்றுக்கு நடைமுறை ரீதியான கால்கோள் இடப்பட்டது. எனினும் சிங்கள இனவாத சக்திகளும், புலிகளும் அதற்கெதிராக செயற்பட்டார்கள். புலிகள் ஒருபடி மேலே சென்று இந்திய அமைதி காப்பு படை இலங்கையில் இருந்து வெளியேற வேண்டும் என்று கோரிக்கை வைத்ததோடு அன்றைய பிரேமதாசா அரசாங்கத்தோடும் கூட்டமைத்துக் கொண்டார்கள். இது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பலாபலன்கள் மக்களுக்குக் கிட்டாமல் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி நாடகமாகும்.

எனினும் 1994 இல் பதவிக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு 1995இல சமஷ்டி முறையிலான தீர்வை முன்மொழிந்தது. பல்வேறு நெருக்கடிகளினூடாக தளர்வுகளின் ஊடாக சந்திரிகாவின் யோசனைகள் பாராளுமன்றத்தில் வைககப்பட்டபோது எதிர்கட்சியில் இருந்த ஐ.தே.க யினர் அதனை தீயிட்டு கொளுத்தினர். அன்று எதிர்கட்சியில் இருந்த தமிழர் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுபவர்களும் புலிகளின் நிலைப்பாட்டிலிருந்து அத் தீர்வு யோசனைகளை எதிர்த்தனர். பிக்குகள் வீதிகளில் முஸ்டிகளை உயர்த்தி திரிந்தார்கள்.

2002 இல் பதவிக்கு வந்த ரணில் அரசு புலிகளுடன் நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தார்கள். சமஷ்டி முறையை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டார்கள். எனினும் தமிழ் சமூகத்தினுள் ஜனநாயகம் பற்றி அனுசரணையாளர்களோ அன்றி ரணில் அரசோ சிவில் சமூகம் என்று அழைக்கப்படுகின்ற பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்களோ தமிழர்கள் மத்தியில் ஜனநாயகம் வேண்டும் என்ற கோரிக்கையை புறககணித்தார்கள். பல மாற்று அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் கொல்லப்பட்ட போது அதனை கண்டும் காணாதவர்களாக நடந்து கொண்டார்கள்.

புலிகள் கோரிக்கைகளை மக்களின அபிலாசைகளில் இருந்து அல்லாமல் தமது இராணுவ நலன்களின் அடிப்படையில் முன் வைத்தார்கள். அவர்கள் வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனை புலிகளின் கேள்விக்கிடமற்ற அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு கோரிக்கை விடுப்பதாகவும், வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லீம்களின் உரிமைகளை உதாசீனம் செய்வதாகவும் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்பதை நிராகரிப்பதாகவும் அமைந்திருந்தது.

எல்லாமே ஒரு வட்டம் சுற்றி வந்தாயிற்று. தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பதவியேற்றதன் பின்னர் கடந்த 2005 டிசம்பரில் இருந்து புலிகள் தொடர்ச்சியாக யுத்தத்தை நோக்கிய நகர்வுகளை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். அது பெருமளவுக்கு ஆத்திரமூட்டலாகவும், பொது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. தெற்கின் தீவிரவாத சக்திகள் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் கடுமையான நிலைப்பாடுகளை வெளியிட்டு வந்தன. இன உறவுகளில் மீண்டும் பாரிய விரிசல்கள் ஏற்படுமோ என்றளவிற்கு நிலைமைகள் கட்டுக்கடங்காமல் சென்றன.

கடந்த ஏப்ரலில் திருமலை சந்தையில் நிகழ்ந்த குண்டு வெடிப்புடன் திருகோணமலை, மட்டககளப்பின் எல்லைப பிரதேசங்கள் வவுனியாவின் எல்லைப் பிரதேசங்கள் ஆகியவற்றில் பதற்ற சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. திருமலையில் இருந்து தமிழர்களை விரட்டியடிப்பதற்கான சதிகள் நடைபெறுகின்றனவா என ஐயுறும் அளவிற்கு நிலைமைகள் மோசமடைந்தன. இதன் விளைவாக இந்தியாவின் பிரதம மந்திரி டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் பதற்ற நிலையை தணிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கிடையே குறிப்பாக திருமலையிலும் பொதுவாக வடக்கு கிழக்கிலும் எழுந்த சூழ்நிலைகளால் மக்கள் இந்தியாவிற்கு புலம் பெயர்வது என்ற நிலையும் தோற்றுவிக்கப்பட்டது. இற்றைவரை 12,000 பேர் வரையில் இந்தியாவின் தமிழகத்திற்கு அகதிகளாக தமிழர்கள் சென்றுள்ளனர். இதனால் தமிழக அரசியல் வானிலும் பல்வேறு வாதப்பிரதிவாதங்களும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்களும் எழுந்தன.

விமான குண்டு வீச்சுக்கள் அங்கு பல்வேறு எதிரொலிகளை தோற்றுவித்தன. புலிகளால் கட்டாயமாக பயிற்சிக்கு பிடிக்கப்பட்ட இளைஞர் யுவதிகள், விமான குண்டு வீச்சில் கொல்லப்பட்டதையடுத்து நிலைமை மீண்டும் மோசமடைந்துள்ளது. இங்கு எழுந்துள்ள புதிய சூழ்நிலைகளால் இந்தியா கூடிய அவதானிப்பை இலங்கை விவகாரத்தில் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இலங்கையின் இரண்டு பிரதான கடசிகளும் இணைந்து தீர்வொன்றை முன் வைப்பதன் அவசியத்தை இந்தியா திரும்ப திரும்ப வலியுறுத்தியது. எப்போதும் அன்றாட அரசியல் அக்கறைகளால இனப்பிரச்சினையின் பாரதூரத்தன்மை உணர்ந்து கொள்ளப்பட வில்லை. எனினும் இன்று இந்தியா உட்பட சர்வதேச சமூகம் பிரதான கட்சிகளின் இணைந்த செயற்பாட்டை இப் பிரச்சினையில் கடுமையாக வலியுறுத்துகின்றன. மனிதாபிமான நெருக்கடிகள் அதிகரித்துச் செல்வதும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கை பிரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஜே.வி.பியினரும் சில இனவாத வக்கீல்களும் ஈடுபடு செலுத்தியதும் நிலைமையை இன்னும் கடினமாககியுள்ளது. கிழக்கில் இருந்து தமிழர்களை சுத்திகரிக்க முயல்கிறார்களா என்ற சந்தேகம் உருவெடுத்துள்ளது.

முஸ்லீம்களின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் இணைந்த வடக்கு கிழக்கில் இந்தியாவின் பாண்டிச்சேரியை ஒத்த தனியான அலகொன்றை முஸ்லீம்களின் அபிலாஷையாக முன்மொழிந்திருக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில்த்தான் மாவிலாற்று தண்ணீர் பிரச்சினையை உண்டாக்கி மூதூரை கைப்பற்றுவதற்கான முயற்சியிலும் அங்கிருந்து முஸ்லீம்களை வெளியேற்றுவதற்கான சதி நடவடிக்கைகளிலும் புலிகள் ஈடுபட்டார்கள். எல்லா சமூகங்களிலுமே தூய இனம் பற்றி பேசப்படுகிறது. இது இலங்கை ஒரு தேசமாக பரிணமிப்பதில் மிகப் பெரிய இடையூறாக இருந்து கொண்டிருக்கிறது.

இலங்கையில் அதிகாரப்பகிர்வு ஐககிய இலங்கை என்பதில் தீவிர செயற்பாட்டாளராக இருந்த தோழர் கேதீஸ்வரன லோகநாதன் அவாகள் கொல்லப்பட்டதும் அதிகார பகிர்வுக்கு விரோதமான ஒரு இராணுவ வகைப்பட்ட செயற்பாடாகவே அமைந்திருந்தது. இனங்களுக்கடையே அதகாரங்களை பகிர்ந்தளிப்பது தொடர்பில் வெவ்வேறு காலகட்டங்களில செயலூக்கமுள்ள பங்களிப்பை வழங்கியவர்கள் படுகொலை செய்யப்பட்டமையை எமது வரலாறு முழுவதும் காணமுடியும். அந்த வகையில் இப்போது நிகழ்ந்திருப்பது தோழர் கேதீஸ் அவர்களின் படுகொலை.

இத்தகைய அதி மானிடர்கள் படுகொலை செய்யப்படுவதும் மக்கள் கொல்லப்படுவதும் அகதிகளாக விரட்டப்பட்டுக் கொண்டிருப்பதும் சகிக்க முடியாத கட்டத்தை அடைந்துள்ளனர்.

புலிகள் ஏற்றுக்கொள்வது, ஏற்றுக் கொள்ளாதது என்பதல்ல இங்கு பிரச்சினை. 60ஆண்டுகளுக்கு மேலாக நிலவும் இப் பிரச்சினை கால் நூற்றாண்டு கால யுத்தத்தையும் அழிவையும் கண்ட பிரச்சினை குறிப்பாக தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் பேரனர்த்தங்களை ஏற்படுததிய இப் பிரச்சினைக்கு நிரந்தர தர்வு காண்பதற்கு இலங்கையின பிரதான அரசியல் கட்சிகள் தம்மை அர்ப்பணிக்கத் தயாராக வேண்டும். இனியும் இதில் தாமதிக்க முடியாது. அதற்கான ஊக்குவிப்புக்கள் அழுத்தங்கள் சகல முனைகளிலும் கொடுக்கப் பட வேண்டும். ●

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**


E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Weix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 22 25179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 22 27118

141A, மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 22 23102

சென்செபஸ்தியார் வீதி
மன்னார்.
☎ 023 22 32822


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தின் விளிம்பில் நிறுத்தப்பட்டுள்ள சிறுவர் சிறுமியரும் அகதிகளாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களும்

புலிகள் குறிப்பாக பிரபாகரன் எதை விரும்புகிறார் என்றால் சொந்த சமூகத்தை அழித்தாவது தனது இருப்பை உறுதியாக்கிக் கொள்வதே.

தற்போது வன்னியில் சிறுவர் சிறுமியர் படுகொலை செய்யப்பட்டதாக பாசாங்காக கண்ணீர் வடிக்கிறார்கள். கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக சகல சிவிலியன்களுக்கும் ஆயுத பயிற்சியளிப்பதாக தமது அச்சு, இலத்திரணியல் வலைத்தள ஊடகங்களில் பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். பெருந்தொகையான நிழல் படங்கள், செய்திகள் வெளியிடப்பட்டன.

இந்த பிரச்சார உத்தியின் பின்னணியில் ஒரு மிகப்பயங்கரமான சதியோசனை காணப்பட்டது.

கருணாவின் பிளவிற்குப் பின்னர் புலிகளின் படையணிகளில் ஏற்பட்ட ஆட்பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு நேரடியாகவோ மறைமுகமாவோ சாதாரண மக்களுக்கு பெரும் அனர்த்தம் விளைவிக்க திட்டம் தீட்டியிருந்தனர். அத்திட்டத்தின் அங்கமாக பன்முக பாசிச செயற்பாடுகள் அமைந்திருந்தன.

சாதாரண மக்கள் அதிகமாக புழங்கும் இடங்களில் படையினரை இலக்கு வைத்து கிளேமோர் கண்ணிவெடி தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். கோயில்கள், தேவாலயங்கள், வைத்தியசாலை, பாடசாலை, பஸ் நிலையம் இவற்றுக்கு அருகிலேயே அநேகமாக தாக்குதல்களை மேற்கொள்வார்கள். பண்டிகை காலங்களில் மக்கள் அதிகமாக கூடியிருக்கும் நேரங்களில் தாக்குதல்களை நடாத்துவார்கள்.

இதற்கு கடந்த நவம்பர், டிசம்பரில இருந்து ஏராளமான உதாரணங்கள் உண்டு. ஒன்று இத்தாக்குதல்களில் இடையில் அகப்பட்டு பொது மக்கள் மரணிக்க வேண்டும் இல்லையேல் ஆத்திரமூட்டப்பட்ட படையினர் திருப்பித்தாக்கினால் அதில் மக்கள் மரணிக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.


அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இத்தகைய தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலம் பெருந்தொகையானோர் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வருவார்கள் அவர்களில் இருந்து யுத்தத்திற்கு ஆட்திரட்டலாம் என அவர்கள் எதிர்பார்த்தார்கள் அந்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

அடுத்தகட்டமாக திருமலை சந்தை பகுதியில் குண்டுதாக்குதல் நடத்தி ஒரு இனப்பதற்றத்திற்கு வித்திட்டார்கள். இதன் மூலமும் தமது பகுதிக்கு ஆட்கள் அதிகமாக வருவார்கள் என எதிர்பார்த்தார்கள்.

கெப்பிட்டிகொலாவையில் 150 பயணிகள் சென்ற பஸ் மீது கிளேமோர் குண்டுத்தாக்குதல் நடத்தி நாடளாவிய ரீதியில் இனக்கலவரத்தை ஏற்படுத்த முயற்சித்தார்கள்.

விடுமுறையில் திருமலை வந்த படையினரின் கப்பல் மீது வெசாக் காலத்தில் தாக்குதல் நடத்தி இனக் கலவரத்தை ஏற்படுத்த முயன்றார்கள்.

முஸ்லீம் மக்கள் மீது வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி. அக்கரைப்பற்று மூதூர், கிண்ணியா என தாக்குதல் நடத்தி அவர்களை கிழக்கில் இருந்து வெளியேற்றுவதற்கான சதி நிகழ்ச்சி நிரலை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தார்கள் இறுதியாக முஸ்லீம் மக்களை மூதூரை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையில் வெற்றி பெற்றார்கள்.



குறுகிய தமிழ் பாசிச வெறி உணர்வை பலபடுத்தி பிரபாகரனின் இருப்பை உறுதிப்படுத்துவதே புலிகளின் நோக்கமாக இருந்தது இருக்கிறது. இதில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையோ மனித உரிமை, ஜனநாயகம் போன்றவையோ புலிகளுக்கு அக்கறைக்குரியனவல்ல. சிங்கள தீவிர இனவாத சக்திகளை விட ஒருபடி மேலாக தமிழ் மக்களின் இந்த உரிமைகளுக்கு எதிராக செயற்படுபவர்கள் புலிகள். அவர்கள் என்றைக்கும் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைப்பதை, விமோசனம் ஏற்படுவதை ஒத்துக்கொள்ளப் போவதில்லை.

இப்போது வன்னியில் சிறுவர் சிறுமியர் கொல்லப்பட்டதாக உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்வது அவர்கள் கொல்லப்பட்டது தொடர்பான தார்மீக ஆவேசத்தில் அல்ல. இதனை முட்டாள தமிழர்கள் முழுதாக விளங்கிக்கொள்ள வேண்டும். புலிகளுக்கு இவர்கள் கொல்லப்பட்டது ஒரு பிரச்சார வரப்பிரசாதமாகவே இருக்கிறது. உணமையில் அவர்கள் மகிழ்ச்சி கடலில் குளிக்கிறார்கள். இன்னும் சிறுவர் சிறுமியரை இளைஞர் யுவதிகளை ஆபத்தில் மாட்ட வைப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் உணர்ச்சி அலைகளை கிளப்பி பிரபாகரனின் வண்ணப் படங்கள் கொண்ட சுவரொட்டிகளை ஒட்ட முயற்சிக்கிறார்கள். அதற்கு சிறுவர்களின் உயிர்களும் அகதிகளாக பட்டினியில் வாடும் தமிழர்களின் அவலமும் மூலதனமாகின்றன.

புலிகள் 2004 டிசம்பர் 26 சுனாமியின் பின்னர் தவித்த முயலடித்த கணக்காக உறவுகளை ஆழிப்பேரலைக்கு காவுகொண்ட மக்கள் மத்தியில் இருந்து சிறுவர் சிறுமியரை இறாஞ்சி சென்ற சம்பவங்கள் ஏராளம்.

பாடசாலைகளை அடிக்கடி மூடுவதன் மூலமும் மாணவர்களை விட்டு படையினருக்கு கல்லெறிவதன் மூலமும் பகிரங்கமாக அவர்களை அராஜக நடவடிக்கைகளுக்கு தூண்டுவதன் மூலமும் அவர்களை ஆபத்தின் விளி ம்பிற்கு தள்ளினார்கள்.

வடக்கு கிழக்கில் கிளேமோர் வைப்பவர்கள் மக்களே என இடையறாமல் பழிபோட்டுக்கொண்டு அவர்களுக்கு அனர்த்தங்கள் மனித உரிமை மீறல்கள் பெருவாரியாக நடப்பதற்கு வழிவகுத்தார்கள்.

இறுதியாக சிறுவர் சிறுமியரை உயிருடனேயே அவர்களின் சிதையில் இருத்தினார்கள்.

இவர்களை தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ளாதவரை புறந்தொதுக்காதவரை தமிழ் சமூகத்துக்கு விமோசனம் இல்லை. அடுத்து வரும் தசாப்தங்களில் வடக்கு கிழக்கில் தமிழர்கள், முஸ்லீம்கள் கணிசமான அளவு அருகிப்போகலாம். இதன் மூல கர்த்தாக்களாக புலிகளே இருப்பார்கள்.

அகதி தமிழன்

# சடலங்களின் தேசம்

**வோக்கடலை விற்கும வயோதிப மாது சுட்டுக் கொலை.**

**வீதியில் ஐஸ்பழம் வற்பவர் சுட்டுக் கொலை.**

**ஊரில் மீன் விற்பவர் சுட்டுக் கொலை. மனைவியும் சகோதரரும் நடு வீதியில் அவல ஓலம்....**

**ஆம். இவை இன்றைய யாழ்ப்பாணத்தின் அன்றாடக்காட்சிகள்.**

யுத்தமுனையில் சரமாரியான எதிர்பாராத தோல்வியைத் தழுவியதின் புலிகளின் எதிர்வினை வீரம் இப்போது இந்த அப்பாவிகள் மீது காட்டப்படுகிறது. புலிகள் எத்தகைய ஈவிரக்கமில்லாத மனோவியாதிக்காரர்கள் என்பதை இந்த படுகொலைகள் மௌனமாகப் பறைசாற்றி நிற்கின்றன.

யாழ்ப்பாண வீதிகளில் இந்தபடுகொலைகளைப் புரியும் புலிகளைப்பலப்படுத்துவதற்கு வாட்டலூ பல்கலைகழக மாணவர்களின் அறிவு பயன்படுத்தப்படுத்தப்படுகறது.

இது மட்டுமா கந்தளாய் அகதிமுகாமில் பாலகர்கள் அவதரித்து கட்டாந்தரையில் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் உண்ண உணவிற்கும், இருப்பிடத்திற்கும், கழிப்பிடத்திற்கும் திண்டாடுகிறார்கள். மூதூரல் இருந்து செல்மழையின நடுவே கந்தளாய் புறப்பட்டவர்களின் துயரத்தை கல்வாரி மலைக்கு சிலுவை சுமந்த யேசுபிரான் அனுபவத்திருப்பாரோ என்னவோ.

சுக ஜீவிகளான உலகத்தமிழரின் உல்லாசப் பொழுதுபோக்கிற்க்காக வன்னியின் வேலுப்பிள்ளை மைந்தன் நடத்தும் குரூர ஆனந்த களியாட்ட நிகழ்ச்சியிது.

வன்னியில் சிறுவர் சிறுமியர் செத்தால் இந்த பாசிச சலவை மூளைக்காரர்கள் அதனை வைத்து ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் கொண்டாட்டம் நடத்துகிறார்கள். வண்ணமயமான பதாகைகளில் வேலுப்பிள்ளை மைந்தன் காட்சி தருகிறார். குழந்தைகள் இரத்த சிதிலங்களாக.

தூ! என்ன சமூகமிது. இறைவனுக்கு பிள்ளைக் கறி சமைத்துக் கொடுத்த கதை எமது பக்தி இலக்கியங்களில் உண்டு. பிரபாகரனின் பக்தர்கள் பிள்ளை கறி சமைப்பவர்கள். புசிப்பவர்கள். நரமாமிச பட்சணிகள். தமிழ் ஊடகங்கள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு நரமாமிச வேட்டையில் இறங்கியிருக்கின்றன. தூ! கேடுகெட்ட பிறவிகள்.

"இடைக்காடர் மைனர் கண்ணாடி மஸ்தான்" களும் அவர்களின் அலங்கார நாரிமணிப் பரிவாரங்களும் ஏதோ பொங்கல், தீபாவளிக் கொண்டாட்டம் போல் குளிர்கோட்டை அணிந்து புல்லரித்து தினவெடுத்து திரிகின்றன. அகதிகள் பேரில் பணம் பண்ணி சுகித்திருந்த பூபாலன்களுக்கும், உசாக்களுக்கு கனடாவில் தம் உச்சாணிக் கொப்பு வாழ்வு கவிழ்ந்து விடுமோ என்று கிலேசத்தில் அலைகினறன. அந்தோன் செகோவின் குதிரை வணடிக்காரனின் துயரத்தை விட ஆயிரம் மடங்கு துயரத்தை கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் எமது தேசத்தில் வாழ்கிறார்கள்.

கட்டுடையில் சுட்டுக் கொல்லப்பட்ட மீன்வியாபாரியின் மனைவியும் சகோதரரும் இரத்தில் மூழ்கடிக்கப்பட்ட சடலத்தின் முன்னால் கதறியளும் நிழற்படக் காட்சி ஒன்று ஆயிரம் கேள்விகளை எழுப்புகிறது. எமது காட்டு மிராண்டி வரலாற்றுப் பெருமையை பறைசாற்றி நிற்கிறது.

நாலு படை வைத்திருக்கிறோம், அரசாங்கம் வைத்திருக்கிறோம் என்றவர்கள்- சண்டையில் பின்னடைவு கண்டவர்கள் "பேளையில் இருக்கும் பாம்பென உயிர்க்கும்" பட்டினியின் பிடியில் சிக்கித் தவிக்கும் எமது சமூகம் தம்மீது கோபம் கொண்டு விடுமோ என்றஞ்சி இப்போது சகட்டுமேனிக்கு போட்டு தள்ளுகிறார்கள். தாம் தோற்றாலும் சமூகத்திற்கு பயம் இருக்கவேண்டும் பாருங்கள்.

புதிதாக அகதிகளானவர்களின் தொகை 2 லட்சத்தை தாண்டி விட்டது. மானிடத்தின் துயரம் எம்வானத்தை நிரப்புகிறது. திருமலையிலிருந்து மக்கள் பேருந்துகளில் மன்னார் வந்து சேர்கிறார்கள். உயிர்பையை காவாந்து பண்ணுவதற்காக மக்கள் அங்கும் இங்கும் தறிகெட்டு ஓடிக்கொண்டும், ஓடமுடியாதவர்கள் மூலைகளில் முடங்கிகொண்டும் இருக்கிறார்கள். வேலுப்பிள்ளை மைந்தனின் பாசிச பிரமாண்ட மயானக் கனவு நிஜமாகிக்கொண்டிருக்கிறது. மனித உயிர்களின் தேசம் மனிதச்சடலங்களின் தேசமாகப் பிரதீயீடுசெய்யபட்டுக் கொண்டிருக்கிறது .

ராஜீவ் காந்தியின், நீலனின் சிதிலமாக்கப்பட்ட உடல்களை இரசித்தவர்கள், ரஜனிதிரணகம, சரோஜினி யோகேஸ்வரன், கேதீஸ் லோகனாதன், தங்கத்துரை, பத்மநாபா, சாம் தம்பிமுத்து, அமிர்தலிங்கம், ஸ்ரீசபாரட்ணம் வாசுதேவா போன்றவர்களின் உடல்கள் துப்பாக்கிச் சன்னங்களால் குருதி சொரிய வீழ்ந்தபோது கெக்கலி கொட்டி ரசித்தவர்கள், குண்டுகளாக மாற்றப்பட்டு சிதறடிக்கப்பட்ட சிறுமியரின் தலை வேறு உடல்வேறாகச் சிதறியபோது ஆனந்த கண்ணீர் சொரிந்தவர்கள் தற்போது இந்த கொடுமைகளை ஒரு ஆராதனையாகச் செய்து கொண்டு வருகிறார்கள். கலிங்கத்து பரணியில் கற்பிதம் செய்யப்பட்ட ஊழிபபேய்களும், நீலிப்பேய்களும் பிரபாகரனின் புண்ணியத்தில் கடவாயில் இரத்தம் வழிய கோரப் பற்களுடன் எமது தேசத்தில் உலாவருகின்றன.



தமிழர்களின் சுதந்திரத்தின் பேரில் தமிழர்களை கசக்கிப் பிழிந்து ஒரு குரூர மயானத்தை நிர்மாணித்து இந்த மயானம் அழகாக இருக்கிறது என்று வண்ணங்களில் உலகிற்கு காட்டுகிறார்கள்.

சாவோலை போன்ற ஒரு யாழ்ப்பாணத்து பத்திரிகை கொஞ்ச நாட்களுக்கு முன்னால் புயல் வரும், சுனாமி வரும், பூகம்வரும் பொறுத்திருந்த பாருங்கள் என்று தனது "வெறுவாய்க்கில கெட்ட" ஆசிரிய தலையுங்கங்களில் இடையறாது மக்களை அசுறுத்திக் கொண்டிருந்தது.

இப்போது திடீரென்று அது சமாதானப்பிரியனாகி சாத்தான் வேதம் ஓதுகிறது. இவர்களுக்கெல்லாம் இது ஒரு வியாபாரம். சாவு வியாபாரம் "கையது கொண்டு மேலதுபொத்தி" அவல வாழ்வு வாழும் அகதிகளான மக்களின் மனிதாபிமானப் பிரச்சனைகளும், வீதியிலும், வீடுகளிலும், வளவுகளிலும் மரணித்துக கொண்டிருப்பவர்களின் பிரச்சனைகளுமே இன்று முதன்மையானவை. வேலுப்பிள்ளை மைந்தனுக்கு அவனது பரிவாரங்களுக்கும் அந்தப்புர மாலை மஞ்சம் கட்டுவதல்ல.

அதுபோல் தென்பகுதியில் பேய் பிடித்துதிரியும் பைசாசங்களுக்கும் வேப்பிலை அடித்தாக வேண்டும். இந்த தமிழ் சிங்கள பைசாசங்கள் சாதாரண மக்களின் மரணங்களில் தமக்கு ஏதும் சுவறுமா என்று அலைபாய்கின்றன. முஷ்டியை உயர்த்தும் பிக்குகள் இனவாத நெகிடி நெருப்பை மூட்டுகின்றன. துட்டகைமுனு,கஜபாகு நிலப்பிரபுத்துவ ராசாக்களின் கதைகளைச் சொல்லி இன்றைய தலை முறையை உசுப்பவேண்டும் என்கின்றன. வீர பௌத்த சிங்களம் பற்றி பேசுகின்றன. தமிழ் சிங்கள தீவிரவாத சத்திகள் ஒன்றுக்கொன்று அனுசரணையாகச் செயற்பட்டு இன்று நாட்டை ஒரு ஆபத்தான இன பதட்டத்தை நோக்கி "நீறுபூத்த நெருப்பு" நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றன.

தமிழர்களின் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண முற்பட்டால் அவர்கள் நாட்டை பிரித்து விடுவார்கள் என்கின்றன. தங்களுக்கு தாங்களே வன்முறை மிருகங்களின் பெயர்களைச் சூட்டிக்கொண்டு வலம் வருகின்றன.

**இலங்கையில் இன்றைய முக்கிய கேள்விகள், *மனித உயிர்களின் பெறுமானத்தை எவ்வாறு உணர வைப்பதென்பதே.***

***இந்த நாட்டை தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களின் பல்லின நாடாக எவ்வாறு மாற்றி அமைப்தென்பதே.***

இந்தகேள்விகளுக்கான ஆக்கபூர்வமான நியாயபூர்வமான பதிலைக் கண்டறிவதிலேயே இந்த நாட்டின் எதிர்காலப்

**தொடர்ச்சி 06ம் பக்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் கேதீஸ் சில நினைவு............

01ம் பக்கத் தொடர்ச்சி





அவரால் எழுதப்பட்ட "நினைவுகள் அழிவதில்லை" என்ற நாவல் எம்மால ஓரளவுக்கு வாசிக்கப்பட்டிருந்தது. நாம் எமது வேலைகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நின்ற அந்த கதாபாத்திரங்களால் வெகுவாக ஈர்க்கப்பட்டிருந்தோம்.

இந்த சந்திபிற்கு பின்னர் நாங்கள் ஈழ மாணவர் குரல் பத்திரிகை விநியோகிக்க வீடு வீடாக சென்றிருந்த சமயம் கோவில் வீதியில் அவரது நிறுவனம் ஒன்றிலும் அவரை சந்தித்தோம். ஈடுபாடும் ஈர்ப்பும் அதிகமாகியது. பின்னர் கோயில் வீதியில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்று கலந்துரையாடல்கள் நடத்தினோம். அப்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நிகழ்ந்து கொண்டிருந்த கைதுகள் ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டுவது எவ்வாறு என்பதெல்லாம் எமது கலந்துரையாடல் விடயங்களாக இருந்தன. அவர் எங்களை உற்சாகப்படுத்தினார்.

மனித உரிமைகளுக்கான சிறையில் இருந்து தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான எமது ஈழ மாணவர் பொதுமன்றத்தின் முன்னெடுப்புக்களுக்கு பகிரங்கமாகவும் பகிரங்கமில்லாமலும் உதவினார். யாழ்பெரிய கோவிலில் இருந்து நீண்ட பாதயாத்திரை ஒன்றை யாழ்ப்பாணத்திலிருந்த இடதுசாரி அரசியல்கட்சிகள் தொழிற் சங்கங்களுடன் இணைந்து நடத்தினோம். பொலிசார் ஊர்வலத்தினர் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். அவ்வூர்வலத்திற்கு தலைமையேற்ற சிலரை பொலிசார் கைது செய்வதற்கான முயற்சி நடைபெற்றது. பெரியகோவில் முன்புற வாசலை பொலிசார் அடைத்து நிறைனர். நிலைமையை ஏற்கனவே தோழர் கேதீசிடம் தெரிவித்திருந்தேன். அவர் பிறிதொரு பாதையூடாக பெரிய கோவில் வளவினுள் தனது காரில் வந்து அவர்களை பாதுகாப்பாக ஏற்றிச் சென்றார்.

அவர் யாழ் சிறாம்பியடி ஒழுங்கையில் அவர் அபிவிருத்திக்கும் ஆய்வு கல்வி தொடர்பாடல் ஆகியவற்றுக்கான நிறுவனமொன்றை நடத்தினார். அங்கு சமூக பொருளாதார விடயங்கள் பற்றிய பல கருத்தரங்குகள் நடந்து கொண்டிருந்தது. மணியம் கட்டிடத்தில் மேல் தளத்தில் அந்த நிறுவனம் அமைந்திருந்தது. அந்தக் கட்டிடத்தில் எமது பல கருத்தரங்குகள் கூட்டங்கள் ஆகியவற்றை நடத்துவதற்கு தோழர் கேதீஸ் தாராளமாக அனுமதித்திருந்தார்.

நாங்கள் கூலி விவசாயிகளுக்கான கருத்தரங்குகள், பெண்களுக்கான கருத்தரங்குகள், மாணவர்களுக்கான கருத்தரங்குகள் என எண்ணற்ற கூட்டங்களை நடத்தினோம். யாழ்ப்பாணத்தில் ஒட்டப்படும் அனேகமான சுவரொட்டிகள் அங்கு தான் வரையப்பட்டன. அந்த வகையில் அது எம்மைப் பொறுத்தவரை ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம். தெற்கில் இருந்து வந்த விவசாயிகள் சங்கத்தலைவர்கள், குருனாகல் திருத்தந்தை யோகான் தேவானந்தா தெற்கின் விவசாயிகளின் அனுபவங்களை எம்முடன் அங்கு வைத்து பகிர்ந்திருக்கிறார். அக்காலகட்டத்தில் கியூபாவற்கும் பல லத்தீன அமெரிக்க நாடுகளுக்கும் விஜயம் செய்துவிட்டு திரும்பியிருந்த தயான் ஜெயதிலக்க நிக்கரகுவாவின் சான்டினிஸ்டா இயககம் எவ்வாறு மக்களை அணிதிரட்டி ஒரு போராட்டத்தில் வெற்றி பெற்றது என்பது பற்றிய கருத்தரங்கொன்றை நடத்தினார்.

தோழர் வரதராஜப்பெருமாள் அப்போது யாழ் பல்கலைகழகத்தில் விரிவுரையாளராகவும் கட்சித்தோழர்களுக்கும் புதிதாக அணிதிரண்டுகொண்டிருந்தவர்களுக்கும் கருத்தரங்குகளை நடாத்திக் கொண்டிருந்தவர். அவர் தயான் ஜெயதில்காவின் உரையை மொழிபெயர்த்தார். தோழர் கேதீஸ் சட்டப்பூர்வமான சமூக பொருளாதார அபிவிருத்திக்காக தொடங்கியிருந்த அந்த நிறுவனம் ஏறத்தாழ எமது ரகசிய தலைமைக் காரியாலயம் போல் செயற்பட்டது. அவருடைய வீட்டிலும் நாங்கள் தெற்கிலிருந்து வந்த தோழர்களுடன் உரையாடல்களை நடத்தினோம். அன்று இது மிகவும் ஆபத்தான காரியம். தோழர் கேதீஸ் ஆபத்தை எதிர்நோக்குவதற்கும் தயாராக இருந்தார். அவருடைய யாழ்ப்பாணத்து செல்வாக்குமிக்க பின்புலத்தைச் சேர்ந்த யாரும் நினைத்துப்பார்க்க முடியாத காரியத்தை அவர் செய்து கொண்டிருந்தார். அவர் விடுதலையைப் பற்றி வாய்ச்சவாடல் விடும் புத்திஜீவியல்ல. அவர் நடைமுறை ரீதியான எண்ணங்களை கொண்டிருந்தார். அவர் தனது செல்வாக்கான பின்புலங்களை துறந்து எங்களுடன் ஐக்கியமாக்கிக் கொண்டிருந்தார்.

1982 ஒரு விடிகாலைப் பொழுதில அவரது நிறுவனத்தில் இரவை கழித்து விட்டு நானும் தோழர் நாபாவும் சைக்கிளில் தோழர் கேதீஸின் விட்டிற்கு சென்றோம். இடையில் கோவில் வீதியில் "லங்காராணி" அருளர் வீட்டில் இறங்கி அவருடைய மனைவி பிள்ளைகளிடம் சுகம் விசாரித்து விட்டு திரும்பவும் தோழர் கேதீஸின் வீட்டிற்கு புறப்பட்டோம். அந்தக் காலத்தில் டெலிபோனில் நேரம் ஒழுங்கு செய்து விட்டு செல்வது வழக்கமில்லை.

அங்கு அப்போதுதான் தோழர் நாபாவை தோழர் கேதீஸ் முதன் முதலில சந்திக்கிறார். தோழர் நாபா நீண்ட உரைகளை ஆற்றுவதில்லை. சுருக்கமாக கனதியாக அமைதியாக பேசுவார். அந்தச் சந்திப்பு காந்தியடிகளுக்கும் ஜவகர்லால் நேரு இருவருக்குமிடையே நிகழ்ந்த முதல் சந்திப்பு போல் அந்த வெயில் ஏறாத காலைப் பொழுதில் ஒரு உணர்வை ஏற்படுத்தியது.

80களின் முற்பகுதியில் வடக்கில் தேசிய ஒடுக்குமுறை அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடிய காலத்தில் தெற்கில் மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் வேலையில் இருந்து வீதிக்கு விரட்டப்பட்டிருந்தார்கள். ஜனநாயக உரிமைகளுக்காக போராடுபவர்கள் கைது செய்யப்பட்டும், தாக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். லங்கா சமசமாஜக் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவரும் முன்னணி பெண்கள் உரிமை வாதியுமான விவியன் குணவர்தனா பொலிசாரால தாக்கப்பட்டிருந்தார்.

இந்த கால கட்டத்தில் தோழர் கேதீஸின் ஏற்பாட்டில் ஈழப் பெண்கள் விடுதலை முன்னணிக்கும் கொழும்பு கலாபவன மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின கருத்தரங்கிற்கு எமக்கு அழைப்பு வந்தது. அப்போது நான் வவுனியாவில் நின்றிருந்தேன். நானும் காலஞ்சென்ற தோழர் வேதநாயகம் பத்திமநாயகம் அய்யாவும் இன்னுமொரு காலஞ்சென்ற தோழரும் வவுனியாவில் இருந்து ரயில் ஏறி கொழும்பு புறப்பட்டோம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று ஈழ பெண்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் வந்திருந்தனர். விகாரமகாதேவி பூங்காவிற்கு அருகாமையில் உள்ள கலாபவனத்தின் முன்னால் தெற்கில உள்ள பெண்கள் அமைப்புக்கள் எல்லாம் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (அங்குதான் தோழர் கேதீசின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காகவும் வைக்கப்பட்டது.) வடக்கு கிழக்கில மக்களுக்கு எதிரான தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் தெற்கில் ஜனநாயக உரிமைகளுக்காகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. பின்னர் கலாபவனத்தில் சர்வதேச மகளிர் தின கூட்டம் நடைபெற்றது. அதில் வடக்கில் இருந்து வந்த ஒரேயொரு பெண்கள் அமைப்பான ஈழ பெண்கள் விடுதலை முன்னணியும் பங்கு பற்றியது. கொழும்பில் தலைமறைவாக நின்றிருந்த தோழர் நாபாவும் வந்திருந்தார். எமது வெகுஜன அமைப்புக்கள் ஒரு அரைபகிரங்க நிலையில் வேலை செய்யக்கூடிய சாத்தியம் இருந்தது.

இக் கூட்டத்தின் பின்னர் இலங்கையின் பிரபல சமூக ஆய்வாளரும், இடதுசாரியும் பெண்ணியவாதியுமான குமாரி ஜெயவர்த்தனவிடம் தோழர் கேதீஸ் எங்களை அழைத்துச் சென்றார். அவருடன் கலந்துரையாடுவதற்கு கேதீஸ் உதவி செய்தார். நாங்கள் அப்போது கொண்டிருந்த கருத்துநிலையின் அடிப்படையில் பெண் விடுதலை என்பது சோஷலிச புரட்சியின் ஒரு பகுதியே என்ற கருத்து என்னுள் வேரூன்றி இருந்தது. நான் இதனை குமாரி ஜெயவர்த்தன அவர்களிடம் தெரிவித்தேன். அப்படியானால் இலங்கையில் சோஷலிசம் வரும்வரை உங்கள் தேசிய விடுத



லைப் போராட்டத்தை ஒத்திப்போட முடியுமா என குமாரி ஜெயவர்த்தன என்னிடம் வினவினார். நீண்ட பல வருடங்களுக்குப் பின்னர்தான் அவர் கூறியது எனக்கு புரிந்தது.

அவர் கூறியது பெண்களின் சுதந்திரத்துக்கான இயக்கம் சுயாதீனமானது. அது தொடர்ச்சியானது. அதனை வேறு எந்த வேலைத்திட்டத்துடனும் இணைத்து ஒத்திப் போட முடியாது. அதே போல்தான் தேசிய இனங்களின் சுயநிர்ணயத்துக்கான கோரிக்கையும் என்பது பின்னாளில் எனக்குப் புரிந்தது.

1983 இற்குப் பிந்திய சூழலில் நெதர்லாந்தின் ஹெய்க்கிற்கு தனது புலமைசார் செயற்பாடுகளுக்காக சென்ற கேதீஸ் அங்கும் இலங்கையில் தேசிய ஒடுக்குமுறை மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொண்டார். பின்னர் சென்னையில் இருந்த தோழர் நாபாவுடன் தொடர்பு கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எப் இல் முழு நேரமாக பணி செய்வதற்கான தனது விருப்பத்தை தெரிவித்தார்.

ஈழப் போராட்டத்தில் ஈ.பி.ஆர்.எல். எப் இன் பங்களிப்பு என்ற ஒரு சிறு கைநூலை அவர் ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். அதில் வடக்கு-கிழக்கில் நாங்கள் செய்த வெகுஜன வேலைகள் எதிர்ப்பு இயக்கங்கள் பற்றி கால வரிசைப்படி குறிப்பிட்டிருந்தார். அவர் சென்னைக்கு வர இருந்த சமயம் நான் சென்னையில் நின்றிருந்தேன். குறுகிய நாட்களில் நாடு திரும்பிவிட்டேன். திரும்பிய சில மாதங்களில் நான் மயிலிட்டியில் வைத்து இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டேன்.

1986 களின் இறுதிப்பகுதி வரை இராணுவ முகாம்கள், வெலிகடை சிறை என காலம் ஓடிக்கொண்டிருந்தது. தோழர் கேதீஸ் எமது அமைப்பின் பேச்சாளராக செயற்பட்டுக் கொண்டிருந்தார். 1984 இல் நிகழ்ந்த எமது முதலாவது காங்கிரசில் அவர் பங்குபற்றியதையும் அவர் 1985 இல் திம்பு மாநாட்டில் வகித்த வரலாற்றுப் பாத்திரத்தையும் நான் சிறையில் இருந்த போது வந்த செய்திகளினூடாக அறிந்து கொள்ள முடிந்தது.

ஈழ தேசிய விடுதலை முன்னணியின் உருவாக்கத்தில் தோழர் கேதீஸின் பங்கு முக்கியமானது. பல கூட்டங்களில் பங்குபற்றியிருக்கிறார். தமிழகத்தின் காங்கிரஸ் தலைவர்கள், இடதுசாரி தலைவர்கள்,திராவிட இயக்கங்களைச் சார்ந்தவர்கள், கல்விமான்களை மாத்திரமல்ல டெல்லியிலும் அவர் ஈ.பி.ஆர்.எல்.எப் இற்கு பலமான ஒரு பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். அவர்களும் தோழர் கேதீசின் மீது பெருமதிப்புக் கொண்டிருந்தனர்.

1987 முற்பகுதியில் சிறையில் இருந்து விடுதலையாகி சென்னை சென்ற போது சென்னை சர்க்காரியா காலனியில் தோழர் நாபா உட்பட 13 பேர் கொல்லப்பட்ட அதே வீட்டில் அவரை நான் சந்தித்தேன். மிகவும் உணர்ச்சிகரமான கணங்கள் அவை. எமது இயக்கம் புலிகளால் தடைசெய்யப்பட்டு பல தோழர்கள் படுகொலை செய்யப்பட்டு நிர்க்கதியாக இருந்த சூழலில் ஒரு துயரமான மனோநிலை நிலவிய காலத்தில் நான் அவரை சந்தித்தேன்.

தோழர் பத்மநாபா நாட்டில் எமது தோழர்களுக்கு நிகழ்ந்த அனர்த்தங்கள் காரணமாக அவர்களுக்கு உதவுவதற்கான செயன்முறைகளில் ஈடுபட்டிருந்தார். அவர் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து எமது நாட்டிலுள்ள தோழர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

தோழர் கேதீஸின வீடு சர்க்காரியா காலனியில் எமது காரியாலயத்துக்கு அருகாமையில் ஒரு மாடி குடியிருப்பில் அமைந்திருந்தது. அன்று மாலை அவருடைய வீட்டிற்குச் சென்றிருந்தேன் அவரது மனைவி அப்பலோ மருத்துவமனையில் மிகவும் குறைந்த சம்பளத்தில் ஒரு வரவேற்பாளராக வேலை செய்து கொண்டிருந்தா். தோழர் கேதீஸின துணைவியாரான குமாரசாமி பவானி அவர்களின் பங்களிப்பு மகத்தானது.

தற்போது இனத்துவ கற்கைளுக்கான சர்வதேச நிலையத்தில் பணியாற்றும் கேதீசின் துணைவியார் பவானி பெண்கள் உரிமைகள் தொடர்பாக நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவர் ஒரு சமூக ஆய்வாளரும் கூட. அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பிள்ளைகள் போல் நேசித்து வாழ்ந்த அமரத்துவமான தம்பதிகள். அந்த சம்பளத்தில் வறுமையில் செம்மையாக வாழ்ந்து கொண்டு செயற்பட்டார். இயக்கம் அவ்வப்போது எதையும் உதவிகளை செய்யக்கூடியதாக இருந்ததே தவிர தொடர்ச்சியாக எதையும் எதையும் செய்யக் கூடியதாக இருக்கவில்லை.

தோழர் கேதீஸ் தான் போக்குவரத்து செய்வதற்கு அந்தக் கால ரி.வி. எஸ் சைக்கிள் ஒன்றை வைத்திருந்தார். அவர் தனியாக சகல இடங்களுக்கும் சென்று பலரையும் சந்தித்து வந்தார். மேற்கு வங்கத்தில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் விப்ளோதாஸ் குப்தா என்ற இவரது பல்கலைகழக சகா இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் மத்தியகுழு உறுப்பினராக இருந்தவர். சமகாலத்திலேயே இருவரும் இவ்வாறான ஒரு புரட்சிகர அரசியல் சக்தியின் தலைமைத்துவத்திற்கு வந்திருப்பதாக அவர் நினைவு கூர்ந்தது ஞாபகம்.

உலகின் ஏதோவொரு மூலையில உட்கார்ந்து கொண்டு சௌகரியமாக இருந்திருக்கலாம். ஆனால் சக தோழர்களின் இன்ப துன்பங்களுடன் தானும் ஒருவராக வாழ்ந்தார். தன்னம்பிக்கையும் சவால்களும் இழப்புக்களும் முரண்பாடுகளும் ஐக்கியமும் என்று ஈ.பி.ஆர்.எல்.எப் யதார்த்தமான ஒரு சமூக இயக்கம் என்ற வகையில் பயணப்பட்டுக் கொண்டிருந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னான சூழ்நிலையில் தோழர் பத்மநாபாவுடன் கிழக்கு மாகாணத்திற்குச் சென்று மக்களையும் தோழர்களையும் சந்தித்து வந்தார். 1987 இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை ஏற்று செயற்படுவது பற்றிய மத்தியகுழு கூட்டங்களில் இறுதியாக நடைபெற்ற கூட்டத்தில் அத்தினத்தில் அன்றே அவருடைய நேர்மூத்த சகோதரி புற்றுநோயால் அவதிப்பட்டவர்- டெல்லியில் மரணித்திருந்தார். கூட்டத்தின் இறுதியில்தான் அவர் இதனைத் தெரிவித்தார். இதன் பின்னர் அவர் தனது புலமைத்துவ செயற்பாடுகளை தொடர கட்சிப் பணிகளில் இருந்து தற்காலிகமாக ஒதுங்குவதற்கு அனுமதி கோரினார். அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நோர்வேயில் தனது பல்கலைகழக படிப்பு விரிவுரை நேரங்கள் போக மிகுதி நேரத்தில் கட்சி பணியாற்றினார். 1988 இன் இறுதிவாக்கில் அவர் திருமலை வந்து எம்மையெல்லாம் சந்தித்து சென்றார். வடக்கு கிழக்கு மாகாண அரசின் செயலூக்கமான செயற்பாடுகளுக்கு அவ்வப்போது முதலமைச்சர் வரதராஜட்பெருமாளுடன் கருத்துக்களைப பரிமாறிக் கொண்டார்.

நோர்வேயில் புலி பாசிஸ்டுக்களின் ஏஜண்டுகளால் கூட்டமொன்றில் வைத்து தாக்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்தது.

1990 இல் வடக்கு கிழக்கு மாகாணசபை புலிகள் பிரேமதாசா கூட்டு சதியினால் சீர்குலைக்கப்பட்டு இந்திய அமைதிகாப்பு படை வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள், ஆதரவாளர்கள் குடும்பங்கள் இந்தியாவிற்கு புலம் பெயர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

தோழர் பத்மநாபாவின் அழைப்பின் பேரில் இயக்கம் கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கிய காலத்தில் தனக்கு நோர்வேயில் கிடைத்த வசதி வாய்ப்புக்களை எல்லாம் துறந்து டெல்லியில் வந்து கட்சிப் பணியாற்றினார்.

இக்காலகட்டத்தில்தான் தோழர் பத்மநாபா சென்னையில் 1990 ஜூன் 19 படுகொலை செய்யப்பட்டார். அவர் உடனடியாகவே விரைந்து வந்து அவரின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதோடு கட்சியின் எதிர்காலம் தலைமைத்துவம் பற்றிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

1990 இல் சென்னையில் இருந்து என்னையும் இன்னுமொரு தோழரையும் டெல்லிக்கு அழைத்திருந்தார். இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ஊடகவியலாளர்களை சந்திப்பதற்கான ஒருவார செயற்பாடாக அமைந்திருந்தது. அவர் இந்திய மார்க்சிய கட்சியின் அகில இந்திய செயலாளராக இருந்த சுர்ஜித் அவர்களையும் அப்போதைய பேச்சாளரான பிரகாஷ்கரத் அவர்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருநத பரதன் அவர்களையும் எமக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

அப்போது மத்திய அமைச்சராக இருந்த தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரரும் நாடாளுமன்ற உறுப்பினராகவுமிருந்த ப.சிதம்பரத்தின் வீட்டிற்கும் நாங்கள் சென்றோம் நாராயணசாமி உள்ளிட்ட ஊடகவியலாளர்களையும் நாம் சந்தித்தோம். அக்காலகட்டத்தில் இலங்கையில் புலிகள் முஸ்லீம்களை வடக்கை விட்டு விரட்டிக் கொண்டிருந்தார்கள். அவர் டெல்லியில் இந்திய மார்க்சிய கட்சியுடன் ஏற்படுத்திய உறவு கேரளாவிலும் எமக்கு ஒரு ஆதரவு தளத்தை உருவாக்கியது.

தோழர் பத்மநாபா மரணத்திற்குப் பின்னர் 1992 இல் சென்னை புழல் அகதி முகாமில் நிகழ்ந்த இரண்டாவது காங்கிரஸில் தோழர் கேதீஸ் பங்கு பற்றியிருந்தார். இரண்டாவது காங்கிரஸின் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை அவரால் மொழி பெயர்க்கப்பட்டது. அவர் அந்த காங்கிரஸிலும் ஒரு ஜனநாயக நிறுவனமாக ஈ.பி.ஆர்.எல்.எப் ஐ தகவமைப்பதிலும் தூர நோக்குடன் செயற்படுவதற்குமான பங்களிப்பை வழங்கினார். ஆக்க சக்திகளை எப்போதும் ஊக்குவித்தார். அதற்கான உள்ளுணர்வும் தெளிவும் புரிதலும் அவருக்கு இருந்தது.

தோழர் நாபாவின் நினைவு மலர் தயாரிப்பதில் அதற்காக இரங்கல் செய்திகளை இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமான்கள், பத்திரிகையாளர்களிடம் அனுதாபச் செய்திகளை சேகரித்து அனுப்பி நினைவு மலரின் கனதியை அதிகரித்தார். அவர் இலங்கைக்கோ அல்லது சென்னைக்கோ தொலைபேசி எடுப்பதானால் தற்போதைய வசதிகள் எதுவும் கிடையாது. தொலை பேசி நிலையங்களுக்குச் சென்றோ அல்லது ரூபா நாணயங்களை போட்டு பேசும் சில பிரத்தியேகமான தொலைபேசிகளுக்கு சென்றோ தகவல்களை, செய திகளை பரிமாறிக்கொள்வார். சௌகரியமில்லாத வீதியோரங்களில் நின்று இக் காரியத்தை அவர் வழமையாக நேர்த்தியாக செய்தார்.

1992 இல் இலங்கை வந்த தோழர் கேதீஸ் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் தனது செயற்பாடுகளை கொழும்பை மையமாக வைத்து மேற்கொண்டார். அவருக்கு கொழும்பில் உள்ள புலமைசார் செயற்பாட்டாளர்கள் இராஜதந்திர வட்டாரங்களிலும் இடதுசாரி கட்சிகள் ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மத்தியிலும் பரிச்சயம் ஏற்பட்டது. பல புதுப்பிக்கப்பட்டன.

"தமிழ் கார்டியன்" என்ற ஆங்கில மாதாந்த பத்திரிகையொன்று அவரால் கட்சிக்காக கொண்டுவரப்பட்டது. அவர் இனப்பிரச்சினை தீர்வுக்காக உருவாக்கப்பட்ட மங்கள முனசிங்க தலைமையிலான குழுவிலும் அங்கத்துவம் வகித்தார். அதிகார பகிர்வினூடு இலங்கை ஒரு தேசமாக பரிணமிப்பதே அவருடைய அரசியல் புலமைத்துவ அக்கறைக்குரிய விடயமாக இருந்தது.



ஏகபிரதிநிதித்துவத்தையோ அல்லது ஏகமாற்று அல்லது அரைகுறை ஜனநாயகத்தையோ அவர் ஏற்றுக் கொண்டது கிடையாது. கூட்டு முடிவுகளில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். ஜனநாயகம் மனித உரிமைகளை அடிப்படையாக கொண்ட சமூகத்தை அவர் அவாவுற்றிருந்தார். கட்சியின் பத்திரிகையை, அதிகார பகிர்வு தொடர்பான ஆவணங்களையோ அவர் செல்லும் கருத்தரங்குகளில் அல்லது வேறு நிகழ்ச்சிகளில் விநியோகிப்பதிலும் அவர் ஒரு கட்சி ஊழியர் போல் செயற்பட்டார்.

கட்சியில் நிலவும் தவறான போக்குகளை அவ்வப்போது விமர்சிக்கவும் தவறவில்லை. தலைமைத்துவ பாங்கு நிதி ஆதாரங்களை கையாள்வது கூட்டு செயற்பாடு தொடர்பில் அவர் பல விடயங்களை வலியுறுத்தி இருக்கிறார். ஜனநாயகவாதிகள் அவருக்கு பக்கத்துணையாக நின்றார்கள். பேராசையையும் சுயநலமும் தனிநபர் வழிபாட்டு ஊக்குவிப்பும் அவருக்கு அறவே பிடிக்காத விடயங்கள்.

பரிவாரங்கள் வைத்து நடத்தும் அரசியல் அவருக்கு ஒத்துவராது. கட்சியினுள் அவ்வப்போது இத்தகைய ஆட்களின் சுய உருவங்கள் வெளிப்பட்டபோது தயவுதாட்சணியமில்லாத விமர்சனங்களை முன்வைத்தார். நாங்கள் தவறிழைக்கிறோம் என்றுணர்ந்தால அவர் தொலைபேசியிலோ நேரடியாகவோ தனது ஆதங்கத்தை தெரிவித்து விடுவார்.

எல்லாம் ஒரு 5 நிமிடம் தான். பின்னர் அவர் எங்களுடன் அமைதியாகப் பேசுவார். எமது உடல் நலம் குடும்பநலம்பற்றி விசாரிப்பார். எனக்கு அவரதுகோபம் மிகவும் பிடித்திருந்தது. அதில் போலித்தனமோ கபடமே எதுவும் இருக்காது. அடுத்த நிமிடம் அது பனிபோல் கரையும். முக்கியமான விடயங்களில் வாயோரியாக அலட்சியமாக பேசுவது நடந்து கொள்வது அவருக்குப் பிடிக்காது.

ஆங்கிலத்தில கடந்த 20 ஆண்டுகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் கைநூல்கள் அனைத்திலும் தோழர் கேதீஸின் செல்வாக்கு இருக்கவே செய்யும். அவர் கொழும்பில் வேலை செய்த காலத்தில்கூட பாதுகாப்பை பெற்றுக் கொண்டவரல்ல. ஒருபுறம் புலிகளின் ஊடுருவலும் மறுபுறம் பிரேமதாசா அரசின் மனித உரிமை மீறல்களும் என்றிருந்த காலத்தில் கூட அவர் தனக்கென பாதுகாப்பை ஏற்படுத்திக் கொண்டவரல்ல.

அவர் எந்த வீட்டு வாசலில் வைத்து படுகொலை செய்யப்பட்டாரோ அதே வீட்டில் இருந்துதான் 1990 களின் முற்பகுதியிலிருந்து தனது அரசியல் புலமைத்துவ கடமைகளுக்காக வெவ்வேறு இடங்களுக்கு சென்று வந்தார். புயல்வீசும் நாட்களில் எல்லாம் அவர் எங்களுடன் இருந்தார். தான் கொல்லப்பட நேர்ந்தால் தனது வீட்டில் அது நிகழக்கூடாது என அவர் தோழர் ஒருவரிடம் தெரிவித்திருந்தார். இதுமிகவும் வேதனையானது. எமது சமூகத்தின் தலைசிறந்த மனிதன் ஒருவன் இவ்வாறு பேசுவதற்கான கூறுகளை எமது சமூகம் கொண்டிருப்பதுதான் அவலமானது.

1994 இல் கட்சியில் இருந்து விலகி தமது புலமைத்துவ செயற்பாடுகளுக்காக சென்ற இடங்களில் எல்லாம் அவர் தனித்துவமாக மிளிர்ந்தார். முதலில் கொழும்பு பல்கலைகழக அரசியல் விஞ்ஞான பீடத்தில் அதிகார பகிர்வு தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் லிமிட்டெட்டின் வாராந்தப் பத்திரிகையான "வீக்கன்ட் எக்ஸ்பிரசில்" சிறிது காலம ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தில் இணைந்து பணியாற்றினார். இன முரண்பாடுகள் தொடர்பான ஆய்வுப் பிரிவிற்கு அவர் தலைவராக இருந்தார். மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தில் அவர் வேலை செய்யும் போது அவர்களால் நடத்தப்பட்ட பல கருத்தரங்குகளில் அவர் தனித்துவமாக மிளிர்ந்தார்.

அவர் மிக கூரிய அவதானிப்பாளர் என்றும் மிகத்துல்லியமாக தர்க்க வலுவுடன் கருத்துக்களை வைப்பவர் என்றும் கருதப்பட்டார். இத்தகைய கருத்தரங்குகளில் அவர் அதிகார பகிர்விற்கான பொறிமுறைகள் கொள்கைகள் தொடர்பாக மாத்திரமல்ல ஏகபிரதிநிதித்துவம் மாற்றுக் கருத்துக் கொண்டோர் படுகொலை செய்யப்படுவது முஸ்லீம் மக்களின் தனித்துவம் தொடர்பாகவும் அவ்வப்போது அவர் கருத்தரங்குகளிலும் தனது கட்டுரைகளிலும் வலியுறுத்தி வந்தார்.

யாருக்கும் அஞ்சி எதையும் பூசி மெழுகும் பழக்கம் அவரிடம் கிடையாது. எதுவும் நெற்றிக்கு நேரே தீட்சணியமாக அவர் கட்சியிலிருந்து தனது புலமைத்துவ செயற்பாடுகளுக்காக சென்றிருந்தாலும் தான் ஒரு சமூக இயக்கப் பின்புலத்தில் செயற்பட்டு வந்தவர் என்பதை எப்போதும் மறந்தது கிடையாது. நாங்கள் எமது பத்திரிகையில் எழுதும் விடயங்களிலும் சரி நாங்கள் விடுக்கும் அறிக்கைகளிலும் சரி அல்லது எமது நடவடிக்கைகளிலும் சரி அவர் ஒரு அவதானிப்பை எப்போதும் வைத்திருந்தார். அவருக்கு விமர்சனங்கள் இருப்பின் உடனடியாகவே தொலைபேசி ஊடாக எம்மிடம் அதனை விமர்சனமாகவோ அல்லது தவறுகளை திருத்துவதற்கான ஆலோசனைகளாகவோ முன் வைப்பார்.

தோழர் றொபேட் யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்டபோது தொலைபேசி ஊடாக அந்த செய்தியை அவருக்கு தெரிவித்தபோது அவர் உடனடியாக அழுதுவிட்டார். பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து தோழர் றொபேட்டின் உடல் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டபோது தான் முதலில் அவரை பார்க்க வேண்டும் என்று ஜயரட்னா மலர்சாலைக்கு வந்து அஞ்சலி செலுத்திச் சென்றார். தோழர் றெபேட்டின் பூதவுடலுக்கு அருகே தோழர் பத்மநாபாவின் படத்தை வைக்குமாறு என்னிடம் கேட்டுக் கொண்டார்.

ஒரு விஸ்தாரமான ஜனநாயக மாற்று அமைப்பொன்று ஏற்பட வேண்டும் என்பதில் அவர் தீவிர அக்கறை கொண்டிருந்தார். இயக்கங்கள், இயக்கங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என பலரையும் இணைத்து ஒரு அமைப்பு நிறுவப்பட வேண்டும் என்பதில் அவர் தனது புலமைத்துவ செயற்பாடுகளுடன் தனது கருத்தை வழங்கிக் கொண்டிருந்தார். அவருடைய "இழந்த சந்தர்ப்பங்கள்" என்ற நூலும் "சத்தியா" என்ற பெயரில் அவர் எழுதிய கட்டுரைகளும் அவர் 80 களின் முற்பகுதியில் இருந்து வெவ்வேறு காலகட்டங்களில் எழுதிய குறிப்புக்கள் கைநூல்களும் மீள் வாசிக்கப்படுவதும் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில ஒரு நாகரீகமான அரசியல் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகும்.

அவர் "மரணத்தை அல்ல வாழ்க்கையை கொண்டாடுவோம்" என்று எழுதிய கட்டுரை எமது தற்போதைய சமூக அவலத்தை சுட்டிநிற்கிறது. தோழர் பத்மநாபாவின் நினைவு நூலில எங்களது தலைவரும் வழிகாட்டியும் என்ற மகுடம் அவரால் இடப்பட்டது. அவர் தோழர் பத்மநாபா, நீலன் திருச்செல்வம், தோழர் றொபேட் பற்றி ஞாபகார்த்த கட்டுரைகளை வரைந்துள்ளார்.

மிகவும் எளிமையானதும் சிக்கனமானதும் அவரது வாழ்க்கை. அவருக்கு சில உடல் ரீதியான பிரச்சினைகள் இருந்த போதும் அவரது கட்டுப்பாடான வாழ்க்கை முறையினாலேயே அவரால் கடுமையாக உழைக்க முடிந்தது.

அவர் வெறும் இன அடையாளங்களுக்குள் தன்னை அடக்கிக் கொண்டவரல்ல. அவர் ஒரு சர்வதேசவாதியாக, ஒரு மானிடனாக தன்னை அடையாளப்படுத்தி இருந்தார்.

இலங்கையில் மாத்திரமல்ல ஐரோப்பாவில் வட அமெரிக்காவில் அவர் பல கருத்தரங்களில் பங்குபற்றியிருக்கிறார். படுகொலை செய்யப்பட்ட முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களையும் ராமமூர்த்தி போன்ற மார்க்சிய கட்சி தலைவர்களையும் ஹக்சர் ஊர்மிளாபட்னீஸ், பேராசிரியர் முனி போன்ற சரித்திரவியலாளர்களையும் சுமித் சக்கரவர்த்தி போன்ற ஊடகவியலாளர்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடியிருக்கிறார்.

தோழர் கேதீஸ் எம்முடன் செயற்பட்டது எமக்கெல்லாம் ஒரு பெருமிதத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. அவருடைய மொழிப் புலமை, கருத்துவளம், விவாத ஆற்றல் என்பன இங்கு குறித்துரைக்கப்பட வேண்டியன. குழந்தைகள் மீது அவர் பேரன்பு செலுத்தினார். அவர்களுடன் உரையாடும் போது தானும் ஒரு குழந்தையாக மாறிவிடுவார்.

மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் கருத்தரங்குகளின் போது அவர் வெவ்வேறு கருத்து நிலைகளின பிரசன்னத்திற்கான இடைவெளி இருக்க வேண்டும் என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். 2002 சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மிகுந்த விசனமும் வேதனையும் கொண்டிருந்தார். நோர்வே தரப்பினிடம் வடக்கு கிழக்கில் ஜனநாயகத்திற்கான இடைவெளி தொடர்பாக அவர்களுடைய விழிப்புணர்வின்மை குறித்து நேரிடையாகவே தனது விமர்சனங்களை முன்வைத்திருக்கிறார்.

சமாதான செயலகத்தில் அவர் பணியாற்ற சென்ற போது இதில் உங்களது அபிப்பிராயம் என்ன என்பதையும் என்னிடமும் கேட்டார். அவர் யுத்தமற்ற பாதையில் இந்த நாடு செல்ல வேண்டும் தனது அதிகாரப் பகிர்வினூடான ஐக்கியமான இலங்கை கட்டியெழுப்புவதற்கான பங்களிப்பை தான் இதில் வழங்க முடியும் என கருதியிருந்தார். சவாலான பணியை அவர் முன்னெடுத்திருந்தார்.

தமிழ் பாசிசம் சிங்கள அதிதீவிர வாத சக்திகள் இவற்றின் விமர்சனங்கள் வன்முறைகளுக்கிடையே தனது பணியை முன்னெடுத்தார். அது ஒரு புலமைத்துவ பணியாகவே அமைந்திருந்தது. அதிகார பகிர்ந்தளிப்பிற்கான கட்சிகளின் பிரதிநிதிகளின் குழுவிற்கும் அவர் தலைவராக இருந்தார். இனப்பிரச்சினையில் துறை தோய்ந்த அனுபவம் வாய்ந்தவர்கள் இல்லாதவொரு பெருங்குறை இருந்த இடத்தில் அவரது பணி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அவ்வப்போது தொலைபேசியூடாக கேட்டுக் கொள்வார். அவர் மரணித்த அன்று காலையில் கூட ஊர்காவற்றுறையில், மண்டைதீவில் என்ன நடைபெறுகிறது என்று கேட்டிருந்தார். அன்றைய தினம் தான் அவருடைய குரலை நான் இறுதியாக கேட்பேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. தனது பிரியாவிடையை அவர் அறிவித்தாரோ என அன்று இரவு அவரது மரணச் செய்தி கேட்டு என் மனம் துன்புற்றது. அவரது மரணச்செய்தி ஒரு பாரிய வெறுமை உணர்வை ஏற்படுத்தியது.

எம்மை பொறுத்தவரை கேதீஸின் மரணம்- "எமது சமூகத்தின் எதிர்காலம் நல்வாழ்வு தொடர்பில் இதயபூர்வமாக அக்கறை செலுத்தியவனும், பாசிசதிற்கெதிராக மனிதாபிமானத்தை பிரதியீடுசெய்ய தனது அறிவை ஆற்றலை ஓயிவொழிச்சலின்றி உபயோகித்தவனுமான ஒரு உன்னத மனிதன் உலக மானிடன் 2006 ஆகஸ்ட் 12 இல் தனது சிந்தனையை நிறுத்திக் கொண்டான்" என்பதே.

இந்த சமூகத்திற்கு என்ன நடந்திருக்கிறது தான் எதை இழந்திருக்கிறது என்பதை புரியாததுதான் மிகவும் அவலமானது. இவ்வாறு எத்தனையோ மனிதர்கள் எமது சமூகத்தில் உயிரை மாய்த்திருக்கிறார்கள் இவர்களை நாம என்றோவொரு நாள இவர்களின் புதைகுழிகளில் இருந்து இவர்களை எமது தோள்களில் தூக்கிச் செல்வோம். வரலாற்றின் அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை. தோழர் கேதீசுடன் சம காலத்தில் அவருடைய நண்பர்களாக தோழர்களாக வாழக் கிடைத்தவர்கள் என்ற பெருமித உணர்வு எமக்கு என்றைக்கும் உண்டு.

தோழர் கேதீஸ் மெலிந்த உடல் வாகு கொண்ட மென்மையாக பேசும் கம்பீரமான மரணத்திற்கஞ்சாத மனிதர். அவரது கண்ணில் மனிதத்தை நேசிக்கும் கனிவும் அறிவும் பிரகாசித்தது. ஒளிவீசும் அகன்ற நெற்றி. உன்னதமான மானிடன்.

ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டிச் சென்ற மனிதன். தோழரே உங்கள் பணியை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம். நீங்கள் எங்கள் இதயங்களில் வீற்றிருக்கிறீர்கள். பெருந்துயருடன் எம் பிரியாவிடை.

இச்சிறுகுறிப்பை எழுதி முடிக்கும் போது தோழர்களே! கண்கள் குளமாகின்றன. நெஞ்சு கனக்கிறது. அந்த உன்னதமான- புன்முறுவலும் அறிவும் கலந்த அந்தக் கணங்களெல்லாம் வந்து போகின்றன. எம்மில் ஒளியாக இருந்த அந்த செம்பரிதிக்கோளம் மேல்வானத்தில் வண்ணங்கள் காட்டி மறைந்தபோது பேரிருள் எம்மனதை நிறைத்தது.

ஈடில்லா இழப்பின் துயரம். போய் வாருங்கள் தோழரே. தோழர் றொபேட்டிற்கு நீங்கள் எழுதிய இரங்கல் குறிப்பில் ஓய்வொளிச்சல் இன்றி உழைத்த தோழரே இப்போது நீங்கள் அமைதியாக உறங்குங்கள் என்று எழுதியிருந்தீர்கள். தற்போது தோழரே அதே வார்த்தைகள் உங்களுக்கும். அமைதியாக உறங்குங்கள்.

## குடும்பம்

தோழர் கேதீஸ்வரன் செல்லையா லோகநாதன் திலகவதி தம்பதிகளின் கடைசிப் புதல்வர். 17 நவம்பர் 1951 இல் அவர் பிறந்தவர். பருத்தித்துறை துன்னாலை தெற்கு அவரது பூர்வீகம். லோநாதன் இலங்கையின் புகழ் பூத்த பொருளியலாளர். இலங்கை வங்கியின் முதலாவது தலைவர். உலக வங்கியிலும் ஆலோசனைப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்.





சதானந்தன் கணக்காளர், டாக்டர் ஸ்ரீதரன் காலஞ்சென்ற கருணைரட்ணம் ஆகியோர் இவரது மூத்த சகோதரர்கள். திருமதி வாசுகி மகேஸ்வரன் காலஞ்சென்ற திருமதி லலிதா யோகசுந்தரம் இவரது மூத்த சகோதரிகள். 1940 களில் பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தர்மகுலசிங்கம் இவரது பெரியதந்தையார் என அறியப்படுகிறது.

தோழர் கேதீஸ் இற்றைக்கு 28 ஆண்டுகளுக்கு முன்னர் குமாரசாமி அவர்களை திருமணம் செய்துகொண்டார். அவர் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் அப்போது ஆய்வாளராகப் பணியாற்றினர். அமரத்துவமான தம்பதிகளாக அவர்கள் வாழ்ந்தனர்.

## கல்வி

ஆரம்பத்தில் சமூக ஆய்வுமன்றத்தில் பணியாற்றினார். பின்னர் 1980 களின் முற்பகுதியில் அபிவிருத்தி ஆய்வு மற்றும் கல்விக்கான நிறுவனத்தின் இயக்குனராகச் செயற்பட்டார்.

கல்வி ஆரம்பம் றோயல் ஆரம்ப பாடசாலை கொழும்பு, 1958 -1962 சர்ச் பார்க் கொன்வன்ட் சென்னை, பின்னர் சென்தோமஸ் கல்லூரி கொழும்பு, 1965-1968 சென்னைக் கிறிஸ்தவக்கல்லூரி, லயோலாக்கல்லூரி, பின்னர் ஜோர்ஜ் டவுன பல்கலைக்கழகம், 1983 நெதர்லாந்து ஹெய்க் பல்கலைக் கழகம்.

## காலத்தினூடே

1984-1985 ஈ.பி.ஆர்.எல்.எப் இல் திம்பு பேச்சுவார்த்தையில் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் பேச்சாளராகப் பங்கு பற்றினார். ஈழ தேசிய விடுதலை முன்னணி உருவாகுவதில் பங்களித்தார்.

1988-1990 வரை நோர்வேயின் பல்கலைக்கழகமொன்றில் பகுதி நேர விரிவுரையாளராகவும் மாணவராகவும் இருந்தார்.

1990-1992 வரை டெல்லியில் ஈ.பி.ஆர்.எல்.எப் பணிகளை முன்னெடுத்தார்.

1992-1994 வரை ஈ.பி.ஆர்.எல்.எப் பின் பேச்சாளராக கொழும்பில் செயற்பட்டார்.

1995 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் பீடத்தில் இனவிவகாரங்கள் சம்பந்தமான ஆய்வில் பேராசிரியர் ஜெயதேவ உயங்காவுடன் இணைந்து செயற்பட்டார்.


1996-2005 வரை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இனமுரண்பாடுகள் பற்றிய ஆய்வுப்பிரிவின் முகாமையாளராக கடமையாற்றினார்.

2006 இன் முற்பகுதியிலிருந்து இலங்கை சமாதானச்செயலகத்தின் பிரதி செயலாளராகச் செயற்பட்டார். அதிகாரிப்பகிர்விற்கான அனைத்து கடசிகளின் பிரதிநிதிகள் குழுவினரைக் கொண்ட ஆலோசனைக் குழுவின் செயலாளராவும் பணியாற்றினார்.

"நாம் வாழ்க்கையைக் நேசிப் போம் மரணத்தை அல்ல. ஆனால் எமது தார்மீக உணர்வுகளுக்கு மரண அச்சுறுத்தல் தடைபோட முடியாது" . தோழர் கேதீஸ்.

தோழமையுடன் சுகு- ஸ்ரீதரன்
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை
முன்னணி - பத்மநாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காந்தி வாழ்க்கைச் சித்திரம்

## பி.ஆர். நந்தாவின் நூலில் இருந்து

### இளம் அரசியல்வாதி

நேரத்தை வீணடிக்காது வேலையில உடனே இறங்கினார் காந்தி. சட்டத்தை எதிர்த்து திட்டம் தீட்டும் ஒரு அரசியல் ஆலோசனை சபையாக அந்த உபசார விருந்து உருமாறியது. அவருடைய முதல் அரசியல் பிரச்சாரத்தை நடத்துவதற்கான ஏதோ ஒரு உந்துதல் அந்த இளம் வக்கீலை நடத்திச் சென்றது. பல்வேறு தரப்பட்ட இந்திய சமூகத்தினரிடையே ஒரு ஒற்றுமை உணர்வை தோற்றுவித்தார் அவர். வாக்குரிமை மறுப்பால் நேரக்கூடிய விளைவுகளைத் தன் சொந்த மக்கள் மட்டுமன்றி, ஐரோப்பிய பொதுக் கருத்தினை நிர்ணயிக்கும் நல்ல மக்கள பிரிவினரும், நேடால் அரசாங்கமும் உணரும்படி செய்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திய ஆங்கிலேய (குடி மக்களிடையேயும்) அரசுகளுக்கிடையேயும் விரைவில் விழிப்புணர்ச்சியை உண்டாக்கும் வகையில், அவர் தனது பிரச்சாரத்தை வெகுவாக விளம்பரப்படுத்தினார். சட்டமன்றத்திற்கு விண்ணப்பங்கள், தினசரியில் கருத்துக்கள், நேடால் இங்கிலாந்து, இந்தியா ஆகியவற்றிலுள்ள பிரபலமானவர்களுக்குக் கட்சிக்கு நியாயம் கிடைக்க காந்தி வலியுறுததினார். இவை எல்லாம ஒரு பெரும் கிளர்ச்சியைக் கிளப்பிய போதும், வாக்குரிமையைப் பறிக்கும் தீர்மானம் நேடால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. டர்பனிலுள்ள அவரது இந்திய நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் காந்தி, தான் நேடாலில் தங்கியிருப்பதை மேலும் நீடிக்க ஒப்புக்கொண்டு, உச்ச நீதிமன்றத்தில் அட்வகேட்டாகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார்.

பொதுநலத் தொண்டிற்கென ஊதியம் பெறமாட்டார் என்பதால், இருபது வியாபாரிகள் கூடி, அவர் சொந்த செலவிற்காக ஆண்டொன்றுக்கு குறைந்தது 300 பவுண்டு கொடுக்க முன்வந்தனர். அது அவருக்கு டர்பனில் தன் செலவுகளைச் சரிகட்டப் போதுமானதாக இருந்தது. அவர் பலவந்தமாகத் தள்ளப்பட்ட அரசியல் கிளர்ச்சியின் முதல் அனுபவம், இது காணும் சரிகட்ட முடியாது எனத் தோன்றிய கூச்ச சுபாவத்தைப் போக்கியது. அதற்காக தலைக்கனம் உடனே அவருக்கு ஏறிவிடவில்லை.

ஜூலை 1894-ல் இந்திய தேசிய காங்கிரஸின் புகழ் பெற்ற தலைவரான தாதாபாய் நௌரோஜிக்கு எழுதிய கடிதத்தில் இவ்விதம் குறிப்பிட்டார். நான் எனக்காக கொண்ட வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன். நான் அனுபவமில்லாதவன், இளைஞன். எனவே நான் குற்றங்கள் செய்ய வாய்ப்புண்டு. நான் ஏற்றுக்கொண்ட பொறுப்பு எனது திறமையை விடப் பன்மடங்கு பெரிது. ஆகவே, இந்தியர்களை சாக்காக வைத்து எனது திறமையை வளர்த்துக்கொள்ளவென, எனது தகுதிக்கு அப்பாற்பட்ட விஷயத்தை நான் எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தாங்கள் காணலாம். இந்தப் பிரச்சினையைக் கையாள நான் ஒருவன் தான் உள்ளேன். "தாழ்வு மனப்பான்மை என்பது சூழ்நிலையைப் பொறுத்தது. அவருடைய தலைமைய ஒரு சமுதாயம் எதிர்நோக்கியிருந்தது. காந்தி தனது குறைகளையே மறந்தார். கையாளக்கூடிய ஒரே நபர் என்பதால் அந்த வேலையை அவர் ஏற்றுக்கொண்டார். வேறிடமாயிருந்தால் அதிலிருந்து அவர் ஒதுங்கியிருப்பார்.

1893-ல் ஒரு வருடத்திற்காக காந்தி தென் ஆபிரிக்கா வந்தார். பயனுள்ள இருபது ஆண்டுகள் அங்கு அவர் தங்க நேரிடும் என அவர் கொஞ்சமும் நினைத்திருக்கமாட்டார். அங்கு குடியேறிய இந்தியர்களின் அடிப்படைக் குடி உரிமைக்கான போராட்டம் நீண்ட, கடினமான ஒன்றாக இருந்தது. காந்தி நேடால் அரசியலில் குறுக்கிடக் காரணமாயிருந்த இந்தியர்களின் வாக்குரிமையின்மை, இருண்ட கண்டத்தைப் பாதிக்க ஆரம்பித்திருந்த இன வேறுபாடு எனும் நோயின அறிகுறி மட்டுமேயாகும்.

மில்லர் பிரபு (Lord Milner) இவ்விதம் எழுதினார். "ஆசிய மக்கள் அவர்களை வரவேற்க விருப்பமில்லா ஒரு சமுதாயத்தினர் மீது தங்களைத் திணித்துக் கொள்ளும் விநோதர்கள்" உண்மையில் 1860களில். தேநீர்,காபி, சர்க்கரை தோட்டங்களுக்குகந்த பயிரிடப்படாத நிலங்களுக்கு சொந்தக்காரர்கள் ஆயினும், வேலை செய்ய ஆட்கள் இன்றி இருந்த அங்கு குடியேறிய ஐரோப்பியர்களின் தேவைக்கெனவே இந்தியர்கள் தென் ஆபிரிக்காவிற்கு குடிபெயர ஆரம்பித்தார்கள். அடிமைத்தளையை ஒழித்த பின் நீக்ரோக்களை வேலை செய்யும்படி கட்டாயப்படுத்த முடியவில்லை. ஐரோப்பிய தோட்ட முதலாளிகளின் வேலைக்கு ஆள் எடுக்கும் பிரதிநிதிகள், இந்தியாவிலுள்ள மிக ஏழ்மையானதும், சனநெரிசல் அதிகம் உளளதுமான சில மாவட்டங்களில் பயணம் செய்து, நேடாலில் கிடைக்கக்கூடிய வேலையைப் பற்றி வானளாவப் புகழ்ந்தனர். இலவசப் பயணம், தங்க இடம், சாப்பாடு, ஒவ்வொரு வருடமும் ஒரு ஷில்லிங்காக உயர்வு கிட்டும், மாதமொன்றுக்கு பத்து ஷில்லிங் ஊதியம், ஐந்து வருட ஒப்பந்த வேலைக்குப் பின் இந்தியா திரும்பிவர இலவசப் பயண உரிமை அல்லது அதற்குப் பதிலாக அவர்கள் ஏற்றுக்கொண்ட நாட்டில் குடியேறும் சலுகை, இவையெல்லாம் ஏழ்மையான, படிப்பறிவற்ற ஆயிரக்கணக்கான இந்தியர்களைத் தொலைவில் உள்ள நேடாலுக்கு இட்டுச் சென்றன.

கொத்தடிமை ஒப்பந்தத்தின் ஐந்து வருட இறுதியில், இந்தியத் தொழிலாளர்கள் சுதந்திர குடிமக்களாக அங்கு குடியேறுவதை, ஐரோப்பிய தோட்ட முதலாளிகளாலும், வியாபாரிகளாலும் ஜீரணிக்க முடியவில்லை. எனவே இந்தியாவிலிருந்து குடி பெயர்வதற்கான ஒப்பந்த ஷரத்துப்படி நேடாலில் குடியேறும் உரிமையையே அவர் அமுலுக்கு கொண்டுவந்த போதிலும், மாஜி ஒப்பந்த தொழிலாளியின் குடும்ப நபர் ஒவ்வொருவர் மீதும் 3 பவுண்டு வரி விதிக்கப்பட்டது. மாதமொன்றுக்கு ஷில்லிங் பத்திலிருந்து பன்னிரண்டுக்குள் சம்பளம் பெறும், வாட்டமுற்ற ஏழைத் தொழிலாளிகளை இது அடியோடு முடக்கிப் போட்டது.

இந்தியத் தொழிலாளியைத் தொடர்ந்து நேடாலுக்கு சென்ற இந்திய வியாபாரியும் தடைகளைச் சந்திக்க வேண்டி வந்தது. அனுமதிப் பத்திரம் இல்லாமல் எவரும் வியாபாரம் செய்ய முடியாது. ஒரு ஐரோப்பியருககோ இது கேட்டவுடன் எளிதில் கிடைத்தது. ஒரு இந்தியருக்கோ அப்படியே கிடைத்தாலும், மிகுந்த சிரமம், பணச்செலவு ஆகியவற்றுக்குப் பின்னரே கிடைத்தது. ஒரு ஐரோப்பிய மொழியில் வைக்கப்பட்ட பரீட்சை கட்டாயமான ஒன்றாக இருந்ததால் இடைவிடாமல் இறக்குமதி செய்யப்பட்ட பாதி அடிமைகளாய் இருக்கும் ஒப்பந்த தொழிலாளியைத் தவிர்த்து தகுதியுடைய பெரும்பாலான இந்தியர்களுக்கு அங்கு குடி யெரும் நுழைவாயில் தடுக்கப்பட்டு, அடைக்கப்பட்டு விட்டது.

இந்தியர்கள் மீது விதிக்கப்பட்ட சட்டத் தடைகள் மோசமானவையென்றால், அவர்கள் தினமும் பட்ட அவமதிப்புக்கள் அதையும் விட மோசம். பொதுவாக அவர்கள் "மனதாரத்தூற்றுதற்குரிய ஆசிய அழுக்கு மூட்டைகள், அரிசியும், புழுவும் தின்னக்கூடிய மூச்சைத் திணறவைககும் பாப ஆத்மாக்கள் என விவரிக்கப்பட்டனர். அவர்கள் நடைபாதையில் நடந்து செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. முதல், இரண்டாம் வகுப்புப் பயணச் சீட்டுக்கள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. வெள்ளைக்கார பயணி மறுப்பு தெரிவித்தால், ரயில் பெட்டியிலிருந்து மூட்டை போல் முரட்டுதனமாக அவர்கள் தூக்கியெறியப் படக்கூடும். சில சமயங்களில் ரயில் பெட்டியின் படிகளில் நின்று அவர்கள் பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஐரோப்பிய ஓட்டல்கள் அவர்களுக்கு அனுமதி தர மறுத்தன.

அவர்களுடைய நன்மைகளைப் பாதுகாக்கவென நிரந்தரமான ஒரு அமைப்பு இந்தியர்களுக்கு உடனடியாகத் தேவைப்படுகிறது என்பதைக் காந்தி உணர்ந்தார். 1893ல் இந்திய தேசிய காங்கிரஸுக்கு தலைமை தாங்கிய தாதாபாய் நௌரோஜி மேல் உள்ள மதிப்பால், இந்த புது நிறுவனத்திற்கு நேடால் இந்திய காங்கிரஸ் என அவர் பெயர் சூட்டினார். இந்திய தேசிய காங்கிரஸின் சாசனம், செயல்பாடுகள் ஆகியவை பற்றி அவருக்கு அவ்வளவாகத் தெரியாது.

ஆனால் இந்த அறியாமையும் அவருக்குச் சாதகமாகவே இருந்தது. நேடால் இந்தியர்களின் தேவைக்கேற்பத் தனக்குத் தெரிந்த வகையில் நேடால் காங்கிரஸை வடிவமைத்தார். அதன் விளைவாக ஆண்டு முழுவதும் அரசியலில் மட்டுமல்லாது உறுப்பினர்களின் ஒழுக்க சமுதாய உயர்விற்கென துடிப்புடன் செயல்படும் அமைப்பாக அது இயங்கியது. அவ்வளவாக அரசியல் அனுபவமில்லாத ஒரு சமுதாயத்திற்காக உழைத்தாலும் ஒரு தனி மனித ஆதிக்க அமைப்பாக அது இருக்கவில்லை. தானே அதன் காரியதரசியாக ஓய்வின்றி உழைத்த போதிலும் தனது ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஏனையோரின் விருப்பத்தையும் உற்சாகத்தையும் அவர் சேர்த்துக் கொண்டார். அங்கத்தினர்கள் சேர்ப்பதையும் சந்தா வசூலிப்பதையும் கூட அவர் வழக்கத்திற்கு மாறான நூதன முறையில் செய்தார். அரை மனதுடன் ஆதரவு காட்டுபவர்கள் மீது ஒரு இதமான தவிர்க்க முடியாத உத்தியை கையாண்டார்.

ஒரு சமயம் கிராமமொன்றில் இந்திய வியாபாரி ஒருவர் நேடால் காங்கிரஸுக்கான அவருடைய சந்தா தொகையை உயர்த்த சம்மதிககாத வரையில் அவர் இரவு முழுவதும் சாப்பிட மறுத்தார். காலையில் அவர் தமது சந்தாத் தொகையை மூன்று பவுண்டிலிருந்து ஆறு பவுண்டாக உயர்த்த சம்மதித்த பிறகு தான் காந்தி உணவு உண்டார்.

அவருடைய அரசியல் பயிற்சியின் ஆரம்ப வருடங்களில் காந்தி ஒரு அரசியல்வாதிக்கான ஒழுக்கக் கோட்பாட்டை தானே உருவாக்கினார். அரசியலில் அது சரியோ தவறோ ஒருவர் தனது கட்சிக்காகப் போராட வேண்டுமென்ற பரவலான கருத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. மிகைப்படுத்தலை தான் தவிர்த்ததோடு தனது சகாக்களிடமும் அதை வளரவிடவில்லை. நேடால் தேசிய காங்கிரஸ் இந்திய சிறுபான்மையினரின் அரசியல், பொருளாதார உரிமைகளைப் பாதுகாக்கும் கருவியாக மட்டுமல்லாது அதனுடைய சொந்த சீர்திருத்தத்திற்கும் ஒற்றுமைக்கும் ஒரு ஊன்றுகோலாகவும் இருந்தது. தன்னைச சார்ந்த மக்கள் என்று விட்டுவிடாமல் அவர்கள் செய்த தவறுகளை வன்மையாகக் கண்டிக்கவும் செய்ததார். அவர் நேடால் இந்தியர்களின் பலமான ஆதரவாளர் மட்டுமல்ல, அவர்களுடைய தீவிரமான விமர்சகரும் கூட அவர் தலைமையில் நேடால் இந்திய சமூகம், பாகுபாடு பார்க்கும் சட்டங்கள், எரிச்சலூட்டும் தடைகள் ஆகியவற்றை அரசாங்கம் திரும்பப் பெறவும், அடக்கியாளும் திட்டங்களை தவிர்ப்பதற்குமான முயற்சிகளை மேற்கொண்டது.

நௌரோஜி மற்றும் லண்டனிலுள்ள இந்திய தேசிய காங்கிரஸின் ஆங்கில செயற்குழுவைச் சேர்ந்த மற்ற அங்கத்தினர்களுடன் காந்தி தொடர்பு கொண்டவாரிருந்தார். இந்தியாவிற்கான அமைச்சர் மற்றும் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கான அமைச்சர் (British Colonial Secretary) ஆகியோரிடம் தென் ஆபிரிக்க இந்தியர்களின் குறைகள் பற்றித் தந்திகள், கடிதங்கள், மனுக்கள், மூலம், தனது நண்பர்கள், எதிர்ப்பாளர்கள், செய்திதாள், ஆசிரியர்கள், மூன்று கண்டங்களிலும் அதிகாரத்தில் இருந்தவர்களை சளைக்காமல் எழுத்துக் கணைகள் மூலம் துளைத்தெடுத்து விட்டார். ஒரு பிரசாரகராக காந்தி எடுத்த முயற்சிகளின் வெற்றியாக இந்திய தேசிய காங்கிரஸ், தென் ஆபிரிக்க இந்திய குடிமக்கள் மேல் விதிக்கப்பட்ட தடைகளை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியது. லண்டன் டைம்ஸ் இந்தப் பிரச்சினை குறித்து பல முக்கிய கட்டுரைகள் எழுதியது. 1896-ல் தான் முனைந்திருக்கும் இந்த இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு தேடும் பொருட்டு அவர் இந்தியாவிற்கு ஒரு சிறு பயணம் மேற்கொண்டார்.

ஜனவரி 10, 1897-ல் அவர் நேடாலுக்குத் திரும்பியபோது தனது சொந்த நாட்டில் காந்தி இந்தியர்களின் பிரச்சினைக்காக வக்காலத்து வாங்குகிறாா என்ற பத்திரிகைச் செய்திகளால் கொதிப்படைந்த ஐரோப்பிய கும்பல் ஒன்றால், டர்பன் வீதிகளில் அவர் கிட்டத்தட்ட அடித்துக் கொல்லப்படவிருந்ததார்.

1899-ல் திடீரென துவங்கிய போயர் யுத்தத்தின் போது காந்தி 1100 பேர் அடங்கிய இந்திய அம்புலன்ஸ் படை ஒன்றை ஏற்படுத்தினார். "ப்ரேடாரியா நியூஸ்" ஆசிரியரான வெரெ ஸ்டென்ட் (Vere Stent) யுத்த களத்தில் காந்தியின் சேவையை அழகாக எழுத்தில் படம் பிடித்துக் காட்டினார். பெரிய வடிவுள்ள மனிதர்களையெல்லாம் உலுக்கிய முழு இரவின் வேலைக்குப் பின், விடிகாலையில் பாதையோரத்தில் அமர்ந்து ஒரு பிஸ்கட்டைச் சாப்பிட்டுக்கொண்டிருந்த காந்தியை நான் சந்திக்க நேர்ந்தது. (ஜெனரல்) புல்லின் (Buller) படையைச் சேர்ந்த ஒவ்வொரு மனிதனும் சுரத்தில்லாது, சோர்ந்துபோய் எல்லாவற்றின் மேலும் எரிந்து விழுந்து கொண்டிருந்தனர். ஆனால் காந்தி சகிப்புத்தன்மையுடனும் உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் உரையாடினார். அவர் கண்களில் கனிவு தெரிந்தது.

காந்தியின் அகிம்சை பற்றிய கருத்துக்கள் இன்னும் முதிர்ச்சியடையவில்லை என்பது கருத்தில் கொள்ள வேண்டியதொன்று. பிரிட்டிஷ் குடியிருப்புக் பகுதிகளில் குடியேறிய இந்தியர்கள், குடிமகனுக்கான எல்லா உரிமைகளையும் வேண்டி வலியுறுத்தும் போது தாங்கள் தங்களுடையதாக ஏற்றுக்கொண்ட தேசப் பாதுகாப்பில் பங்கேற்பது போன்ற நன்றிக் கடன்களை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதே அப்போதைய அவருடைய வாதம். ஒரு சிறு பான்மையினரின் சார்பாக அம்புலென்ஸ் படையை அமைத்தது ஒரு உயர்ந்த செயல்தான். எனினும், அது வணடிக்கப்பட்டு விட்டது. போயர் யுத்தம் முடிந்து இந்தியர்களுக்கு விடிவுகாலம் வரவில்லை. அவர்களுடைய குறைகள் தீர்க்கப்படாமல் அப்படியே இருந்தன. சொல்லப்போனால் முந்தைய போயர் குடியிருப்புப்பகளில் அவர்களுக்கான புதுத் தளைகள் உருவாகின.

தொடரும்.....

# சடலங்களின்......

03ம் பக்கத் தொடர்ச்சி

பாதை நரகப்பாதையா அல்லது சுபிட்சப்பாதையா எனத் தீர்மானிக்கப்படுகிறது.

மூதூர் பேய் நகரமாக ஆக்கப்பட்டு விட்டது. யாழ்ப்பாணம் அவ்வாறு ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் தற்போது சந்தர்ப்பவசத்தால் அடைபட்டிருக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களும் அங்கு நிரந்தரமாக வாழ சபிக்கப்பட்டிருக்கும் தமிழர்களும் தாம் நரகலோகத்தில் வீழ்ந்து கொண்டிருப்பதை உணர்கிறார்கள்.

பிரபாகர யமனையும் அவனது சித்திர புத்திர பொட்டமானையும் வழிபடும் வரை தமிழர்களுக்கு இந்தப் பாதையே மீண்டும் மீண்டும் திறபடும். பிரபாகர ஊழிக் கூத்தின் வரலாற்றைப் பார்த்தால அது புரியும். ஊரோடு அள்ளுபட்டுப் போகும் நிலமையும், சிறுவர்கள் கல்வியை, விளையாட்டை, கலீர என்ற சிரிப்பொலியை அணிவதற்கு பதிலாக அவாகள் வெடிகுண்டுகளாக மாற்றபடுவதும் உயிருடனேயே அவர்களின் சிதையில் ஏற்றப்படுவதும் வல்வெட்டித்துறை வாரிசின் புதிய அயோக்கிய வியாபாரமாகும். இந்த வியாபாரததின் தரகர்களாக ரிஎன்ஏ காரர்கள் செயற்படுகிறார்கள். இது எளிய சர்வசாதாரணமான அம்மணமான உண்மை. இது எமது தமிழ் மர மண்டையில் ஏறவேண்டும். தந்தை பெரியாரின் வார்த்தையில் கூறுவதானால் இந்த வெங்காயச் சமூகம் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழர்கள் பிரபாகர வழிபாட்டிற்கு பதிலாக மனிதத்தை நேசிப்பதற்கு தம்மை தயார்படுத்த வேண்டும். மகாத்மாகாந்தியை, மாட்டின்லூதாரை, நெல்சன் மண்டெலாவை எம்சமூகத்தில் தோன்றி மறைந்த பாசிசத்தால் மறைக்கபட்ட அருமந்த மனிதர்களை கற்க, புரிந்து கொள்ள முயலவேண்டும். எமது சமூகத்தில் பிறந்த மண்டெலாவும், காந்தியடிகளும், அஞ்சாங்சுகியும் தமிழ்ப்பாசிசத்தால் அழிக்கப்பட்டு விட்டார்கள்.

என்ன நடக்கிறது என்று தெரியாமல் இந்த சமூகம் அழிந்து கொண்டிருக்கிறது. தமிழர்களில் ஒருபகுதியினர் கடவுளா [illegible] துவம்சம் செய்வதை வாடிக்கையாகக் கொண்டிருப்பதால்- அலட்சியமும் ஏளனமும் நிறைந்த பொழுது போக்காக கொண்டிருப்பதால் வேறு இன வாதசக்திகளும் அந்த மாபாதகத்தை தாமும் இழைக்கலாம் எனக்கருதுகின்றன. மனித உயிரை கிள்ளுக்கீரையாக மாறறிய அவக்கேடு பிரபாகரனைச்சாரும்.

இன்று தமிழர்களின் வீட்டுப்படலைக்குப் பக்கத்தில் இராணுவம் நிற்கிறது. பல்கலைக்கழகமும் சோதனை இடப்படுகிறது. ரொறன்ரோவிலும், மொன்ரியலிலும் தமிழர்களின் வீட்டுப்படலைகளில் கனடாப் பொலிஸ் நிற்கிறது. வாட்டலு பல்கலைக்கழகத்தில் மணிமேகலையின் அட்சயபாத்திரத்தில் இருந்து வருவதுபோல் பாசிச மூளைசலவை செய்யப்பட்ட தமிழர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆற்றில் இட்ட பொன் குளத்தில் கிடைத்தது போல் வன்னிச்சலவை வாட்டலூவில் கிடைக்கிறது. அவர்கள் தலையில் துண்டு போட்டு கையில் விலங்கிட்டு அழைத்துச் செல்லப்படும் அவலக்காட்சி ஆர்ட்டிக்கண்டத்திற்கருகிலும் அரங்கேற்றபட்டுக் கொண்டிருகிறது. உலகக் கீர்த்திவாய்ந்த பல்கலைகழகம் தனக்குநேர்ந்த அபகீர்த்தியை நினைத்து விக்கித்து திக்கித்து நிற்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்திற்கு வன்னியிலிருந்து குதிரையில் வந்து பா.உ ஆன கஜேந்திரன்களின் (40 ஆயிரம் படையினரின் சடலங்களை தென்னிலங்கைக்கு அனுப்புவதாக பாராளுமன்றத்தில சூளுரைத்தவர்) நவீன மொஸ்தர்கள் வாட்டலூவிலும். எதிர்காலத்தில் இலங்கைத் தமிழ் மாணவர்களை சேர்ப்பதில் உள்ளூர் பல்கலைக்கழகங்கள் மாத்திரமல்ல, உலகப்பல்கலைகழகங்களும் தயக்கம் காட்டலாம்- தமிழர்கள் பேய் வழிபாட்டாளர்களாக இருக்கும் வரை.

பின்லாடன் -அவனது சகாக்களை விட வல்லுனர்கள் என்ற பெயரும் புகழும் கிட்டி இருகிறது. எந்த நாட்டு விமான நிலையத்திலும், எந்த நாட்டு பேருந்திலும் தமிழர்கள் ஏறினால் பக்கத்தில் இருக்கும் மனிதர்கள் சற்று தள்ளி உட்காரவேண்டிய, முகம் சுழிக்கவேண்டிய, பயந்து நடுங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருகிறது. இந்த அவல அனுபவம் அப்பாவித் தமிழர்களுக்கு இலங்கையிலும் தான். இதற்கெல்லாம மூல காரணகர்த்தாக்கள் யமப்பிரபாவும சித்திரபுத்திர பொட்டுவும் தான்.

தமிழர்கள் கங்கையில் மூழ்கி எழுந்து இவர்களைத் துறக்காதவரை நரகப் பாதையிலிருந்து திருப்ப முடியாது. இந்த பிரகிருதிகளால் தமிழர்கள் பெரும் அனர்த்தங்களையும் அவலங்களையும் சந்திக்கவேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. திருப்பதிக்கே அல்வா கொடுத்ததுபோல் எப்பிஐ இற்கு பணம் வழங்க முற்பட்டவர்கள் சார்ந்த சமூகம் என்ற நிலையில் சந்தேகத்தின் தேடுதல் வெளிச்சம் சகல தமிழர்களினதும் தலையில் இடியாக இறங்கியுள்ளது.

அதுவும் பயங்கரவாதத்திற்கெதிரான போர் உலகளாவிய அளவில் படரவிடப்பட்டநிலையில், வடஅமெரிக்க பத்திரிகைகளிலெல்லாம் டாவின்சிகோட்டை விஞ்சிய நவீனமாக கதை போய்க்கொண்டிருக்கிறது. புலிகளின் முகவர்கள் தாம் சட்டம் ஒழுங்கை பேணும் கண்ணியமான மனிதர்கள் போல் கதை விட்டுக் கொண்டு அகப்பட்டதை சுருட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று கதைகள் பரவுகின்றன. உலகத்தமிழர்களின பணமும் பொருளும் என்னமாய் விரயமாகின்றன. பனியில் விழுந்து, குளிரில் உறைந்து, இரத்ததை பிழிந்து உழைத்த பணம் உருட்டி மிரட்டி ஜமகின்னரர்களால் சூறையாடப்பட்ட பணம் (மனித உரிமைகண்காணிப்புக்குழுவின் அறிக்கையைப் பார்க்கவும்) என்னமாய் விரயமாகிறது பாருங்கள். அது ஊருக்கு வராமல் போனதும் நல்லது தான். ஏனெனில் அது ஊருக்கு வந்தாலும் சிறுவர் சிறுமியரை உயிருடன் சிதையில் இருத்தவே பயன்படுத்தப்படும்.

தமிழர்களைப் பொறுத்தவரை இது தீர்மானகரமான வரலாற்று தருணம். காட்டு மிராண்டிகளைத் துறந்து ஜனநாயக சத்திகளை தமிழர்கள் பலப்படுத்தவேண்டிய தருணமிது.

அகதித்தமிழன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இறுதி யுத்தத்திற்கு நிதியுதவி செய்தல்"

## புலம் பெயர்ந்து தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும்.




### புலம்பெயர் தமிழ் சமூகமும் புலிகள் இயக்கத்துக்கான ஆதரவும்

1983ம் ஆண்டில் ஆரம்பித்து தொடர்ச்சியாக ஏற்பட்ட யுத்தத்தின் தாக்கங்களும், தமிழ் மக்களை இலக்கு வைத்து அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பாரிய அளவான அத்துமீறல் செயற்பாடுகளும், பல்லாயிரக்கணக்கான தமிழர்களை இலங்கையை விட்டு வெளியேறச் செய்தன. 2001ம் ஆண்டளவில் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கையானது உலகெங்கும் வாழும் இலங்கை தமிழர்களின் சனத்தொகையில் கால் வாசி தொகையினராக இருக்கலாம் என பருமட்டாக கணிப்பிடப்பட்டது.

புலம் பெயர்ந்த பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் மேற்கு ஐரோப்பா, இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் வட அமெரிக்காவிலும் காணப்பட்டனர். இவர்களில் மிகப் பெருந்தொகையான எண்ணிக்கையானோர் கனடா (பருமட்டாக 200,000 – 250,000) இந்தியா (பருமட்டாக 150,000), இங்கிலாந்து (110,000), ஜேர்மெனி (பருமட்டாக 500,00) சுவிற்சலாந்து, பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா (ஒவ்வொன்றிலும பருமட்டாக 30,000) ஆகிய நாடுகளில் வாழ்கிறார்கள்.

1996ம் ஆண்டுக்கும் 2001ம் ஆண்டுக்கும் இடையில் கனேடிய தமிழ் சமூகமானது 38 வீதமாக பெருகியுள்ளதோடு, அந்நாட்டில் மிக வேகமாக பெருகுகின்ற இனத்துவ சனத்தொகையாக கணிப்பிடப்பட்டும் உள்ளது. இக் கனேடிய தமிழர்களின் மிகப் பெரும்பான்மையானோர் டொரன்டோ பிரதேசத்தில் வாழுகின்றனர். இலங்கையிலே இருக்கின்ற எந்த ஒரு நகரத்தை விடவும் பாரிய தமிழ் குடிசனத் தொகையை உடைய நகரமாக டொரன்டோ உருவாகி இருக்கிறது.

வெளிநாட்டிற்கு குடிபெயர்ந்த தமிழர்கள் குறிப்பாக இலண்டன் டொரன்டோ போன்ற தமிழர்கள் பெருவாரியாக செறிந்து வாழும் பகுதிகளிலேயே குடியேறியதோடு புதிதாக வந்து குடியேறுவோருக்கு வீடுகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் முகவர் நிலையங்கள். தமிழகளுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்கள், ஊடகங்கள் கோயில்கள் மற்றும் தேவாலயங்கள் மற்றும் கலாச்சார, அரசியல் சேவைகள் வழங்கும் ஸ்தாபனங்கள் உட்பட அடுக்கடுக்கான பல ஸ்தாபனங்களையும் அமைப்புக்களையும் நிறுவிக் கொண்டனர். தமக்கான நிதி மற்றும் அரசியல் ஆதரவுகளை உறுதி செய்து கொள்வதற்காக புலிகள் இயக்கமானது மேற்சொன்ன பல அமைப்புக்களையும் தமது ஆதிக்கத்திற்குள் அல்லது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான வழிவகைகளை செய்து அவற்றைக் கையகப்படுத்திக் கொண்டது. "தமிழ் சமூகத்தினருக்குள் எங்கே எது நடந்தாலும், அதற்குள் தமது நிகழ்ச்சி நிரலை அவர்கள் உறுதி செய்து விடுவார்கள்" என டொரன்டோவில் வாழும் ஒரு தமிழர் குறிப்பிட்டார்.

புலிகளை பொறுத்தவரையில் பெருகிவரும் புலம்பெயர் சமூகமானது அவர்களுக்கான நிதி வளத்தைப் பெறுகின்ற மூலாதாரமாக ஆகியது. இலங்கைப் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட அத்து மீறல்களால் பாதிக்கப்பட்ட அல்லது அவற்றை நேரடியாக கண்ணுற்ற அனேகமான தமிழர்கள், புலிகள் இயக்கத்தினால் அரசாங்கத்திற்கு எதிராக நடத்தும் யுத்தத்திற்கு ஆதரவாக மிக விருப்பத்துடள் நிதி உதவிகளை செய்கின்றனர். மேற்கத்தைய நாடுகளில் வாழும் தமிழர்களிடையே இலங்கையில் தமிழர்களின் சுயாட்சிக்காக புலிகள் இயக்கம் நடத்தும் போராட்டத்திற்கு பேராதரவு இருக்கின்ற அதேவேளை புலிகளை தமிழ் மக்களினதும் அவர்களின் நலன்களினதும் நியாயபூர்வமான பிரதிநிதிகளாக அவர்கள் காண்கின்றனர். 1990 களில் புலம்பெயர் தமிழர்களிடம இருந்து புலிகள் இயக்கத்திற்கு நிலையான ஒரு வருமானம் கிடைக்கப் பெற்றது.

சில நிபுணர்களின் கணிப்பின்படி 1990 களின் நடுப்பகுதியாகும் பொழுது, புலிகள் இயக்கத்தின் இராணுவ ரீதியான வரவு செலவுத் தொகையின் 80-90 வீதமான தொகையானது புலம் பெயர் சமூகத்தினரின் நிதி உதவிகள் உட்பட அவர்களின் சர்வதேச ரீதியான வர்த்தகங்கள், முதலீடுகள் ஆகிய இரண்டில் இருந்துமே கிடைக்கப் பெற்றதாக நம்பப்படுகின்றது. அவர்களின உண்மையான நிதி வருமானத்தை உறுதியாக கணிபபிட்டு சொல்ல முடியாது. உதாரணமாக 1990 இன் பிற்பகுதிகளில் கனேடிய புலம்பெயர் சமூகத்தினரிடம் இருந்து புலிகள் இயக்கத்திற்கு போய்ச் சேரும் நிதித் தொகையானது வருடம் ஒன்றுக்கு மில்லியன் கனேடிய டொலரில் இருந்து 12 மில்லியன் வரையான தொகையாக இருக்கலாம் என பல்வேறு தரப்பினர் கணிப்பீடு செய்துள்ளனர்.

புலிகள் இயக்கத்தின் "தியாகிகளை" கௌரவிப்பதற்காக நடத்தப்படும் வருடாந்த மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் உட்பட, இந்து ஆலயங்கள் மற்றும் பகிரங்கமான பொது மக்கள் கூடும் நிகழ்வுகள் போன்றவற்றிற்கு ஊடாக நிதி சேகரிக்கப்படுதல், போன்ற பல்வேறு வழிகளுக்கு ஊடாக புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிப்பானது நடைபெறுகின்றது. தமிழர்கள் பெருமளவு புலம்பெயர்ந்து வழும் நாடுகளில் தமிழர்களின் நலன்களுக்காக நிதி சேகரிப்பதற்கு என்றே பல்வேறு தர்ம ஸ்தாபனங்கள் தமிழர்களால் நிறுவப்பட்டுள்ளன.

உலகத் தமிழர் இயக்கம். பிரித்தானிய தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உட்பட ஏனைய பல அமைப்புக்களும் இதற்குள் அடங்குகின்றன. இத் தர்ம ஸ்தாபனங்கால சேர்க்கப்பட்ட நிதியானது யுத்தத்தினால் பாதிக்கபபட்ட சிவில் மக்களுக்கு பயன்படுத்துவதற்காக என்று கூறப்பட்டாலும், கனேடிய உளவுப் பிரிவினர் உட்பட ஏனைய பலரின் விசாரணைகளின்படி சேர்க்கப்பட்ட இந்த நிதியில் மிக கணசமானதொரு தொகை புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்படுவதாக தெரியவந்துள்ளது.

2000ம் ஆண்டில் கனேடிய பாதுகாப்பு உளவுப் பரிவினரின் (CSIS) விசாரண முடிவுகளின்படி, கனடா நாட்டிற்குள் ஆகக் குறைந்தது 8 இலாப நோக்கற்ற ஸ்தாபனங்களும் ஐந்து கம்பனிகளும் புலிகள் இயக்கத்தின் முன்னணி ஸ்தாபனங்களாக இயங்கி வருகின்றன.

புலிகள் இயக்கமும் அதன் முன்னணி அமைப்புக்களும், வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளில் உள்ள தனி நபர்களையும் நேரடியாக அணுகி தமக்கான நிதி பங்களிப்புக்களை செய்யும்படி கேட்கின்றனர். தமிழர்கள் மிக நெருக்கமாக செறிந்து வாழும் குடியிருப்பு பகுதிகளுக்கு ஞாயிறு தினங்களில் வீடு வீடாக நிதி சேகரிப்பதற்கு சென்ற 1990ன் பிற்பகுதியில் பல வருடங்களாக இலண்டனில் புலிகள் இயக்கத்திற்காக சுய விருப்பில் பணியாற்றிய தமிழர் ஒருவரிடம் மனித உரிமைகள் கண்காணிப்பு குழு கதைத்தது. தமிழ் குடும்பங்கள் நிதி வழங்குவதற்கு அவர்களை இணங்க வைப்பதற்காக இவரும் ஏனைய தன்னார்வ பணியாளர்களும் (VOLUNTEERS) புலிகள் இயக்கத்தின் பத்திரிகைகள் மற்றும் புத்தகங்களை அடிக்கடி அவர்களுக்கு வழங்குவார்கள்.

ஒவ்வொரு மாதமும் புலிகள் இயக்கத்தின் பிராந்திய பொறுப்பாளர் இத்தன்னார்வ பணியாளரைச் சந்தித்து அக் குறிப்பிட்ட மாதத்திற்கு எவ்வளவு நிதி சேகரிக்கப்பட வேண்டும் என்னும் இலக்கினை தமக்கு வழங்குவார் என அம் முன்னாள் பணியாளர் எம்மிடம் கூறினார். என்ன நோக்கத்திற்காக பணம் சேகரிக்கப்படுகின்றது என்னும் விடயங்கள் மிக வெளிப்படையாகவே கூறப்பட்டன. "தாங்கள் பாரிய இராணுவ படையணியை கட்ட வேண்டும், இராணுவ வாகனங்கள் அல்லது ஆயுதங்களை வாங்க வேண்டும், என்றெல்லாம் அவர்கள் சில வேளைகளில் கூறுவார்கள். அவர்கள் ஆயுதம் வாங்குவது பற்றி வெளிப்படையாகவே பேசினார்கள்." என இம் முன்னாள் பணியாளர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார்.

தனி நபர்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் உட்பட அவர்கள் பற்றிய சகல விபரங்களையும் புலிகள் இயக்கமானது கணணி மூலம் ஆவணபடுத்தி வைத்துள்ளது. "குடும்பங்கள் எமக்கு நிதி தராவிட்டால், நாங்கள் தொடர்ந்து அவர்களைச் சென்று பார்ப்போம். மீண்டும் அடுத்த மாதம் நாங்கள் வருவோம் என அவர்களிடம் கூறுவோம்." என இந்த இலண்டன் முன்னாள் தன்னார்வ பணியாளர் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் கூறினார். இவ்வாறு சேர்க்கப்படும் மாதாந்த நிதி தொகைகளுக்கு மேலாக புலிகள் இயக்கமானது ஒவ்வொரு வருடமும் விசேட திட்டங்களுக்காகவும் பெரும் நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றது. தமிழ் சமூகத்தின் வர்த்தக நிலையங்களிடம் இருந்து 2,000 பவுண்டுகள் (3500 அமெ. டொலர்கள்) தமிழ் சமூகத்தின் தனிப்பட்ட அங்கத்தவர்களிடம் இருந்து 200-250 பவுண்டுகள் (350-430 அமெரிக்க டொலர்கள்) என்ற அளவில் பெரும் தொகை நிதியையும் புலிகள் இயக்கம் கேட்கின்றது.

தங்களின் தொடர்ச்சியான நிதி வருமானத்தை பேணுவதற்காக, நிரந்தர மாதாந்த பங்களிப்புக்களை வழங்க வேண்டும் என்றும் புலிகள் இயக்கம் தமிழ் சமூகத்தினரை கோருகிற. இலண்டனில் உள்ள புலிகள் இயக்கத்தின காரியாலயத்தை நடாத்துவதற்காக, 1990 களின் பிற்பகுதியில் இலண்டனில் பருமட்டாக 1,000 தனிநபர்கள் 10, 20 அல்லது 30 பவுண்டுகளை மாதாந்த நிரந்தர பங்காளியாக செலுத்தி உள்ளனர். இவ்வாறான மாதாந்த நிரந்தர பங்களிப்புக்கான இணக்கங்கள், கனடா உட்பட ஏனைய நாடுகளிலும் ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

2000 களின் முற்பகுதியில் டொரன்டோவில் தமது வங்கி கணக்குகளில இருந்து மாற்றப்படுவதற்கு ஏற்ற வகையில் அனுமதி வழங்கும் படிவங்களை நிரப்பி கையளிக்கின்ற அளவிற்கு இந்நிதி சேகரிப்பு முறைமையானது மிக நவீன மயமாக்கப்பட்டது. இவ்வாறாக வங்கிக் கணக்குகளில் இருந்து இயல்பாகவே புலிகள் இயக்கத்திற்கு நிதி பங்களிப்புச் செய்கின்ற முறையை ஏற்படுத்தியதன் மூலம் தமிழர்களின் வீடுகளுக்கு நிதி சேகரிப்பதற்கென தன்னார்வ பணியாளர்கள் தொடர்ச்சியாக செல்வது குறைக்கப்பட்டது.

கனடா இங்கிலாந்து மற்றும் ஏனைய நாடுகளில், அந் நாடுகளுக்கு புதிதாக வந்து இறங்குவோர் உட்பட தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்கள் பற்றி சகல தகவல்களையும் தமது ஆதரவாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் தகவல்களையும், மற்றும் விபர கோப்புக்களுக்கு ஊடாக (Computer Data base) புலிகள் பயன்படுத்துகின்றது. டொரன்டோவைச் சேர்ந்த ஒரு பெண் மூன்று முறை டொரன்டோவிற்கு உள்ளேயே இடம் மாறினார். "ஒவ்வொரு முறையும் ஓரிரண்டு மாதங்களுக்கு உள்ளாகவே அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து விடுவார்கள். ஒரு முறை நான் இடம் மாறி இரண்டு வாரங்களுக்குள்ளேயே அவர்கள் வந்து விட்டனர்."

2001ம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் புலிகள் இயக்கத்தை ஓர் பயங்கரவாத இயக்கமாக உத்தியோகபூர்வமாக அறிவித்து தடை செய்த பின்னர், இலண்டனில் அமைந்திருந்த புலிகள் இயக்கத்தின் காரியாலயம் மூடப்பட வேண்டியதாயிற்று. 2001ம் ஆண்டு செப்டம்பர் 11ம் திகதி நியூயோர்க் மற்றும் வாஷிங்டன் டி.சி ஆகிய இடங்களில் அல்ஹைதா இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை தொடந்து உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையின் முன்னெடுப்புக்களால், புலிகள் இயக்கம் அல்லது அதன் முன்னணி அமைப்புக்களுக்கு நிதி உதவி செய்வதற்கு பல தனிநபர்கள் தயக்கம் காண்பித்தனர்.

இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையே 2002ம் ஆண்டு பெப்ரவரியில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதானது தமிழர்கள் நிதி பங்களிப்புச் செய்யும் வீதாசாரத்தைப் பாதித்தது. இலங்கையில் கடுமையான மோதல் நிலைமை இடைநிறுத்தப்பட்டதனால் அநேகமான புலம் பெயர் தமிழ் சமூகத்தினருக்கு புலிகள் இயக்கத்திற்கு நிதி பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லாமல் போனது. தனி நபர்கள் நிதி பங்களிப்புச் செய்வதில் தயக்கம் காட்டும் போக்கு அதிகரித்ததன் காரணமாக புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிப்பு நடவடிக்கையானது மேலும் உக்கிரப்படுத்தப்பட்டதாக சில தகவல்கள் கூறுகின்றன.

தொடரும்.......

## மனிதாபிமான நெருக்க.....

08ம் பக்கத் தொடர்ச்சி

ஊரடங்கு நீண்ட நேரம் தளர்த்தப்படுவதால் தனியார், அரச போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறுகின்றன.

இந்த மோதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் யாழ் குடாநாட்டில் படுகொலைகள் இடமபெறுகின்றன. இவற்றில் எல்லாளன் படையினர் (புலிகள்) சில படுகொலைகளை உரிமை கோரியுள்ளனர். தமிழரசுக் கட்சி முக்கியஸ்தரான சிவமகாராசா உட்பட புலிகளுக்கு சார்பானவர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மோதலின் போது செல் தாக்குதலகளால் 24 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன. சில நாட்களுக்கு முன்னர் 7 சடலங்கள சிதைவடைந்த நிலையில் மீடகப்பட்டு அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. வரணி பகுதியில் இராணுவ முகாமுக்கு சமீபமாக விழுந்த செல் வெடித்து 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கச்சாய் கெறபலி பகுதியில் 3 இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் அந்த ஊர்வாசிகள் அல்லர் என தெரிவிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 31ம் திகதி இரவு மிருசு[illegible] கணவன் மனைவியும் அயல் வீட்டுப் பெண் ஒருவரும் ஒரு வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கிளாலியில் மீட்கப்பட்ட 21 சடலங்கள் சிதைவடைந்த நிலையில் (5 பெண்கள் உட்பட) புகைப்படம் எடுத்தபின் பொலிஸாா எரியூட்டியுள்ளனர். இவற்றில் புலிகளின் சடலங்களும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் வைத்தியசாலையில் 25 போ வரை இப்போதும் சிகிச்சை பெற்று வருகின்றனர் இவர்களின் அனேகமானவர்கள் சிறுவர் சிறுமியர். இவர்கள் தென்மராட்சியிலிருந்தும் அல்லைப்பிட்டியிலிருந்தும் வந்துள்ளனர்.

உணவு விநியோகம், குடிநீர் விநியோகம், மின்சார விநியோகம், தொலைத்தொடர்பு, போக்குவரத்து, வங்கிகள், மருத்துவ வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்க இராணுவம் அரசாங்க அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. எிபொருள், வாகனம், மருந்துகள், உதிரிப்பாகங்கள், வங்கிகளுக்கான பணம் என்பவற்றை பெற்றுக்கொடுத்து பொதுமக்களின் பிரச்சினைகளை படிப்படியாக தீர்ப்பதில் இராணுவம் அக்கறையோடு செயற்படுகிறது. உணவு, மின்சாரம், குடிநீர், மருத்துவம் போன்ற அததியாவசிய தேவைகளை கவனிக்கும் அரச ஊழியர்கள் ஊரடங்கு நேரத்தில் பயணம் செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கியுள்ளனர்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்பட இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை ஐ.நா நிறுவனங்களும், சர்வதேச செஞ்சிலுவை சங்கமும் மட்டும் இங்கு செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வங்கிகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பணத்தை மீளப்பெற முடியும். ஏ.ரி. எம் காட் மூலம் நாள் ஒன்றுக்கு 10ஆயிரம் ரூபாவையே இலங்கை வங்கியில் பெறமுடியும்.

குடாநாட்டுக்கு வந்த வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும், இலங்கையின் இதர பகுதிகளிலிருந்து வந்தவர்களும் திரும்பிச்செல்லமுடியாத நிலையில் சுமார் 7 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களில் 161பேர் மட்டும் குடாநாட்டுக்கு உணவுப் பொருட்களை ஏற்றி வந்த ருகுணு கப்பலில் ஆகஸ்ட் 30 திகதி செஞ்சிலுவை சங்கத்தின் துணையுடன் திருமலை வழியாக கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர். அதன்பின் எந்த பயண ஏற்பாடுகளும் இல்லை. இலங்கையில் வெளியிடங்களிலிருந்து வியாபார நோக்கங்களுக்காக வந்தவர்கள் உணவுப் பொருட்கள் இன்மை விலை உயர்வு என்பவற்றால் கையில் காசு கரைந்து போக தொழில் வாய்ப்பும் இன்றி வீடுகளுக்கும் திரும்பமுடியாமல் மிகுந்த சிரமங்களுக்குள் வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.ஆர்.எல்.எவ்- பத்மநாபா கட்சி மூதூர் பகுதி அகதிகளை நலன்புரி நிலையத்தில் சந்திப்பு

சீன்ன உப்போடை சிங்கள மகாவித்தியாலயத்தில் மூதூர் கிழக்குப் பகுதியின் 200 குடும்பங்களைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் ஈ.பி.ஆர்.எல்.எப்- பத்மநாபா அமைப்பின் சிரேஷ்ட தலைவரான இரா. துரைரட்ணம் அவர்களின் தலைமையிலான குழுவினர் அந்த மக்களை சென்று பார்வையிட்டதுடன் அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தனர். இந்த நலன்புரி நிலையத்தை யுனிசெப், எகெட், அரசு ஆகியன இணைந்து நிருவகித்து வருகின்றன.

இதைவிட உறவினர் நண்பர்கள் வீடுகளில் 1800 பேர் வரை தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.



அகதிகளை சந்தித்தபோது

### இவர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள்

01. இயல்புநிலை தங்கள் பிரதேசங்களில் ஏற்படாதவரை தமது பிரதேசங்களில சென்று குடியேறுவது பாதுகாப்பற்றது என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

02. தமது உடைமைகள், வீடுகள் சேதமில்லாததாக தமக்கு திரும்பவும் கிடைக்குமா என கவலை கொண்டுள்ளனர்.

இது விடயம் தொடர்பாக இடர் நிவாரண அமைச்சர் அமீர் அலி, மட்டக்களப்பு சிவில் இணைப்பு அதிகாரி மேஜர் பேட்டி பெரேரா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மெச்சி புறொக்டர் ஆகியோரிடம் முறைப்பாடுகள் ஈ.பி.ஆர்.எல்.எப்-பத்மநாபா துரைரட்ணம் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

03. பனிச்சங்கேணியில் இருந்து மூதூர் வரையுள்ள அரச திணைக்களங்களில் குறிப்பாக கல்வி திணைக்கள ஊழியர்கள், ஆசிரியர்கள் மீண்டும் அப்பிரதேசத்துக்கு கடமைக்குச் செல்ல அச்சம் கொண்டுள்ளனர். இது தொடர்பாகவும் வடக்கு கிழக்கு மாகாண பிரதான செயலாளரிடம் இரா. துரைரட்ணம் முறைப்பாடு செய்துள்ளார்.



இரா. துரைரட்ணம் உண்ணாவிரதமிருந்த தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதத்தை முடித்து வைத்த வேளையில்

04. பனிச்சங்கேணியில் இருந்து மூதூர்வரையும் நிகழ்ந்த மோதல்கள் காரணமாக இப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் உடைமைகள் சேதமடைந்துள்ளன. ஆனால இது தொடர்பான முறைப்பாட்டை கந்தளாய் பொலிசில் செய்யுமாறு மட்டக்களப்பு பொலிசார் கூறுகின்றனர். உண்மையில் மட்டக்களப்பில் முறையிடுவதே நடைமுறைசாத்தியமானது. இது பற்றி சிவில் அதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனிதாபிமான நெருக்கடிகள்

## யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் ஒரு லீற்றர் பெற்றோல் 400 ரூபா வரை போகிறது. மண்ணெண்ணை 150 ரூபா வரைபோகிறது. மாவு காணக்கிடைக்காத பொருள். மீன் கிடையாது. உள்ளூர் காய்கறிகளும் பயங்கரமாக விலை ஏறியுள்ளன. 1500 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் கடந்த மாத நடுப்பகுதியில் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டன. எனினும் இந்த உணவுப் பொருட்கள் யாழ்ப்பாணத்தில் வதியும் 5.5 லட்சம் சனங்களும் எதிர் நோக்கும் நெருக்கடிகளுக்கு உதவுவதற்கு போதியதன்று.

ஊரடங்கு உத்தரவு படிப்படியாக தளர்த்தி வரப்படுகிறது. எனினும் வீதிகளில் மக்கள் அதிகமாக நடமாடுவதில்லை. பாடசாலைகள் இயக்குவிக்கப்படுகின்றன. ஆனால் அச்சம் நீடிக்கிறது.

கடும் செல்வீச்சு சத்தங்கள் சண்டைகள் நடைபெற்ற முகமாலை கிளாலிக்கு அண்டைய பகுதிகளான பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி போன்ற பகுதிகளைச்சேர்ந்த மக்கள் மிகுந்த மனநிலைப்பாதிப்பிற்கும் உள்ளாகியுள்ளனர்.

யாழ், தீவுப்பகுதியைச் சேர்ந்த மக்கள் அல்லலைப்பிட்டியில் கடந்த சிலமாதங்களுக்கு முன்னர் நிகழ்ந்த மனித உரிமை மீறல் சம்பவங்களாலும அதன் தொடர்ச்சியாக புதிதாக எழுந்துள்ள சூழ்நிலைகளினாலும் அல்லைப்பிட்டி தேவாலயத்தில் தங்கியிருந்தவாகள் 12 ந்திகதி சம்பவங்களில் உயிரிழந்தது காயமடைந்தது அல்லைப்பிடி தேவாலய குருவானவர் காணாமல் போனது போன்ற சம்பவங்கள் தீவுப்பகுதியை விட்டு மக்கள் வெளியேறுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் கடந்த மாதம் 11ம் திகதி முகமாலையில் தாக்குதல் நடாத்தியபடி அலலைப்பிட்டி, மண்டைதீவு பகுதிகளில் தரையிறங்க முயற்சித்த புலிகளின் தாக்குதல்கள் இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டு அல்லைபிட்டி பகுதியிலிருந்து ஆயுதங்கள் உட்பட தாம் கொண்டுவந்த பல பொருட்களை கைவிட்டு புலிகள் பின்வாங்கிச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து அல்லைப்பிட்டி, மணடைதீவு பகுதியிலிருந்தும் தென்மராட்சியின் மிருசுவில், உசன் வரணி போன்ற பகுதிகளிலிருந்தும் உடனடியாக மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இவர்களின் தொகை 5 ஆயிரம் என மதிப்பிடப்பட்டிருந்தது. இதன்பின்னர் தொடர்ச்சியாக நடந்த மோதல்களினால் குடாநாட்டின் உள்ளே கடற்கரை பகுதிகளான யாழ்ப்பாணத்தில் உள்ள பாசையூர், கொழும்புத்துறை, குருநகர் பகுதியிலிருந்தும் கச்சாய் பகுதிகளிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். தீவகத்தில் வேலணைப் பகுதியிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இந்த இடம்பெயர்வு இன்றுவரை தொடர்கிறது.

ஒருவாரத்திற்கு முன்னர் மண்டைதீவில் இடம்பெயராது இருந்த 30 குடும்பங்கள் கொக்குவில் பகுதிக்கும், வேலணை பகுதியிலிருந்து 10 குடும்பங்கள் யாழ்ப்பாணத்திற்கும் இடம்பெயர்ந்துள்ளனர். இதேபோன்று இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னர் கொழும்புத்துறை மணியந்தோட்டம், முள்ளி பகுதிகளிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்தனர் இவர்கள் அனைவரும் புலிகள் வெளியேறச் சொன்னதாக குறிப்பிட்டுள்ளனர்.

இதே வேளை இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு உணவுப்பொருட்கள் இலவசமாக வழங்கப்படுவதால் பிரச்சினை எதுவுமில்லாத நாவாந்துறை பகுதி, மக்கள் சிலர் அங்கிருந்து இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளனர். இவர்கள் பகலில் வீடுகளுக்குச் சென்று வருகின்றனர். இப்போது இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரம் என யாழ் மாவட்ட செயலக புள்ளி விபரங்கள் உள்ளன.

மோதல் ஆரம்பித்து பாதை மூடப்பட்ட பின்னர் அரசாங்க அதிபரின் கையிருப்பில் இருந்த 1014 மெற்றிக் தொன் உணவுப்பொருட்கள் பங்கிடப்பட்டு பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டது. குடும்பம் ஒன்றிற்கு 2½ கிலோ அரிசி 2 கிலோ சீனி மூன்று பேருக்கு மேற்பட்ட குடும்பம் ஒன்றிற்கு ஒரு மீன் ரின் என்பன கட்டுப்பாட்டு விலையில் வழங்குமாறு விநியோகிக்கப்பட்டது. மோதல் காரணமாக 11.08.2006 க்கு பின்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கு இந்த பொருட்களுடன் 1 கிலோ பருப்பும் சேர்த்து அனைத்தும் இலவசமாக வழங்க அரச அதிபர் உறுதியளித்தார். இந்த பொருட்கள் வழங்கப்பட்டன ஆனால் வழக்கமான முறைகேடுகளும் இடம்பெற்றன. உதாரணமாக இரண்டு வாரங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்திருந்த சிலருக்கு குறிப்பிட்ட அரசாங்க நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை. பல பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில அனைவருக்கும் பொருட்கள் கிடைக்கவில்லை. கையிருப்பு இல்லை வந்ததும் தருகிறேன் என்று பலர் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டாவது கட்டமாக 25ம் திகதி கொழும்பிலிருந்து கப்பலில் எடுத்துவரப்பட்ட 1500 மெற்றிக்தொன் உணவுப்பொருட்கள் 5 பேருக்கு உட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு 1கிலோ அரிசியும் (5 பேருக்கு மேல் மட்டுப்படுத்தப்படும்) குடும்பம் ஒன்றிற்கு 500 கிராம் சீனியும், 750 கிராம் பருப்பும் வழங்குவதாக அரச அதிபர் அறிவித்தார். இந்த பொருட்கள், தொழில் நடைபெறாததால் மீனவர்களுக்கும், சமூர்த்தி நிவாரணம் பெறுபவர்கள், இடம்பெயர்ந்தவர்களுக்கு இலவசமாக வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. ஏனையோர் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் பணம்கொடுத்து பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது ஆனால் இனறு வரை இந்த பொருட்கள் பொதுமக்கள் அனைவருக்கும் வழங்கி முடிக்கப்படவில்லை.

இந்த கப்பலில் கொண்டுவரப்பட்ட 200 மெற்றிக்தொன் மா பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை. பேக்கரிகளுக்கு வழங்கப்பட்டு பாண் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது 450 கிராம் பாண் 28 ரூபாவிற்கு வழங்கமாறு பணிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் ஒரு மாதத்திற்கு இந்த உணவுப்பொருட்கள் ஒரு குடும்பத்திற்கு போதுமானதில்லை. வெளிச் சந்தையில் இருந்த பொருட்களும் அதிகரித்த விலையில் கிடைத்ததால் சமாளிக்க முடிந்திருக்கிறது. ஆனால் இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் பிரச்சினை தோன்றும். கட்டுப்பாட்டு விலையில் 65 ரூபாவிற்கு விற்கப்படட ஒரு கிலோ சீனி சில இடங்களில் நூறு ரூபாவிற்கு விற்கப்பட்டது. இப்போ வெளி சந்தையிலும் கோதுமை மா, சீனி இரண்டும் கிடைப்பதில்லை.

எரிபொருளுக்கும் தட்டுப்பாடும், எரிபொருள் நிரப்ப நிலையங்களில் நீண்ட வரிசையும் காணப்படுகிறது. டீசல், மண்ணெண்ணெய் கிடைக்கும் அளவிற்கு பெற்றோல் கிடைப்பதில்லை கள்ளச்சந்தையில் பெற்றோல் லிட்டர் 350-400 ரூபாவிற்கு கிடைக்கிறது.

மின்சாரம் இப்போது 9 மணி நேரம் கிடைக்கிறது.

ஊரடங்கு உத்தரவு வடமராட்சி வலிகாமம் தீவக பகுதிகளில் காலை 6மணி தொடக்கம் மாலை 6 மணிவரை தளர்த்தப்பட்டுள்ளது. தென்மராட்சியில் 10 மணியிலிருந்து 4.30 மணி வரை தளர்த்தப்படுகிறது. பாடசாலைகள் ஆகஸ்ட் 30ம் திகதி முதல் நடைபெறுகின்றன. ஆசிரியர்களின் வரவு முழுமையானதாகவும், மாணவர்களின் வரவு கணிசமான அளவிலும் காணப்பட்டது. சேவையில் உள்ள 46 இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் 26 பஸ்கள் பாடசாலை சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக இலங்கை போக்குவரத்துச் சபை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(07.09.2006) மாணவர் ஒன்றியம் (புலி சார்பு) ஏ. 9 பாதையை திறக்குமவரை கல்வி நடவடிக்கைகளை புறக்கணிக்குமாறும் பாடசாலைக்கு செல்ல வேண்டாம் என்று மிரட்டி அறிக்கை வெளியிட்டுள்ளது. இங்கு இயல்பு நிலை நிலவுவதை புலிகள் விரும்பவில்லை.

தொடர்ச்சி 07ம் பக்கம்

## திருகோணமலை

கடந்த ஏப்பிரல் மாதம் திருமலையில் எழுந்த சூழ்நிகைளை அடுத்து திருமலையில் மனித உரிமை மீறல்கள் அதிகமாக இருந்தன. சம்பூர், ஈச்சிலம்பற்று, இலங்கைத்துறைமுகத்துவாரம், கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் இருந்து சனங்கள் இடம்பெயர்ந்தனர் .மாவிலாற்று துருசுப் பிரச்சனையை அடுத்து எழுந்த மோதல் நிலவரம் மூதூர் முஸ்லீம் மக்கள் 30 ஆயிரம் பேர் முற்று முழுதாகவே வெளியேறவேண்டிய சூழ்நிலையைத் தோற்றுவித்தன.

தற்போது ஆகஸ்ட் 20 இறகுப் பிந்திய மோதல் நிலமைகளை அடுத்து ஏறத்தாழ திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கு பகுதியைச்சேர்ந்த மக்கள் முற்று முழுதாகவே இடம்பெயர்ந்து வாகரை கதிரவெளிப்பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இந்த மக்கள் மிக வறிய கிராமவாசிகள் இவர்களின் குரல் பெரிதாக யாருக்கும் கேட்காது. ஏனெனில் இவர்கள் செல்வாக்கான பிரஜைகள் அல்ல. ஆனால் இவர்களது வாழிடம் யுத்தவாதிகளுக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தன. சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இவர்களின் பிரச்சனை பற்றி அக்கறை செலுத்துகின்றன. இவர்களுக்கு அத்தியாவசியப்பொருட்கள் அனுப்பப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது. எனினும் இவர்களுக்கு போதிய உதவி கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு. ஏனெனில் அரச கட்டுபாடற்ற வாகரை, கதிரவெளிப்பகுதியில் இவர்கள் மரங்களின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். புலிகளும் அவ்வப்போது இவர்களுக்கு மத்தியிலிருந்து தான் செல் தாக்குதல்களை நடத்துகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் விவசாயிகள், மீன் பிடிப்பவர்கள். வறிய விவசாயிகளே அதிகம் சொற்ப அளவு உடைமைகளையே கொண்டிருப்பவர்கள் தற்போது ஏதும் அற்றவாக்ளாக மரங்களின் கீழ். கடந்த 20 வருடயுத்தத்தில் இம் மக்கள் பல தடவை பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மிகமோசமான உடல் உளப்பாதிப்புக்களை சந்தித்திருக்கிறார்கள். இவர்களைப் பற்றிய தகவல்கள் இன்னும் முழுதாக வெளிவரவில்லை.

திருகோணமலையை விட்டு மக்கள் காலி பண்ணும் போக்கு அதிகமாக இருக்கிறது எழுந்துள்ள சூழ்நிலைகளால் அவர்கள் மட்டக்களப்பிற்கு இல்லது பேசாலை ஊடாக இந்தியாவிற்கு வந்த கொண்டிருக்கிறார்கள்.

இதுவரை 220000 பேர் வரை அகதிகளானதாக ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

தி. சிறிதரன் 141ஏ, மன்னார் வீதி, குருமன்காடு, வவுனியா. அவர்களால் இரத்தினபிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org